யாழ்ப்பாண பொதுநூலகம்

விலை ரூபா 2-00 12 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 28 பங்குனி 31 ஷ்டபா 3 இதழ் 62
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (13—4—86)

செல்வச்சந்நிதித் தாக்குதல்:

## திட்டமிட்ட மத விரோதச் செயல்!

## ஐ. தே. க. ஆட்சியில் 176 இந்து ஆலயங்கள் சேதம்!

(சென்னை)

"கடந்த வாரம் தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயம் ஆயுதப்படையினரின் தாக்குதலுக்கு இலக்கான சம்பவம் திட்டமிடப்பட்ட ஒரு மதவிரோத நடவடிக்கையாகும்."

தமிழர் பாதுகாப்புப் பேரவை சென்னையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்கு வந்த பின்னர் இலங்கையில் 176 இந்து ஆலயங்கள் ஆயுதப்படையினரால் சேதப்படுத்தப்பட்டுள்ளன" என மேலும் தெரிவித்த மேற்படி அறிக்கை, அண்மைக் காலமாக இலங்கையின் தமிழ்ப்பகுதிகளில் நடைபெற்றுவரும் கலாசார அழிவுகளை வன்மையாகக் கண்டித்துள்ளது. [கெ]

## பெங்களூர் மகாநாட்டில்நாம் கலந்துகொள்ளபோவதில்லை

### சிவத்தம்பி, தம்பிமுத்து, தேவராசா முடிவு

[மட்டக்களப்பிலிருந்து நமது நிருபர்]

இலங்கை இனப் பிரச்னை குறித்து அரசியல் சார்பற்ற முறையில் தமிழ் நாட்டில் நடைபெறவிருக்கும் மகாநாட்டுக்கு அழைக்கப்பட்டிருந்த இலங்கை பிரமுகர் குழுவிலடங்கிய தமிழ்ப் பிரமுகர்கள் அம் மகா நாட்டில் கலந்து கொள்வதில்லை என முடிவு செய்துள்ளனர்.

இம்மாதம் 15 ம், 16 ம், 17 ம் திகதிகளில் பெங்களூரில் இம் மகாநாடு நடைபெறவுள்ளது.

இந்திய முன்னாள் நிதி அமைச்சர் திரு. ஸி சுப்பிரமனியம் உட்பட இந்தியப் பிரமுகர்களும் இலங்கைப் பிரமுகர்களும் இம் மகாநாட்டில் கலந்து கொள்வதாக முடிவு செய்யப்பட்டிருந்தது.

இலங்கையிலிருந்து செல்லும் விசேஷ குழுவில், திரு கொட்பிறே குணதிலகா, திரு சார்ள்ஸ் அபயவர்த்தன, ஜனாப் எம்.எச் ஹுஸெய்ன், பேராசிரியர் கா. சிவத்தம்பி, சட்டத்தரணி சாம். தம்பிமுத்து, ஜனாப் ஏ. எஸ். எம். சகாப்டீன், மேர்வின் டீசில்வா, தேவராசா ஆகியோர் அங்கம் வகிக்கவுள்ளதாகவும் இவர்கள் பெங்களூரில் இரு தினங்கள் தங்கிநின்று இவ்விடயம்குறித்து கலந்துரையாட இருந்ததாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

(11 ம் பக்கம் பார்க்க)

● இலங்கை இனப்பிரச்னைத் தீர்வுக்கு இறுதி முயற்சி:

# பார்த்தசாரதி - பண்டாரி - பஹுத்

# அவசர மந்திராலோசனை

(சென்னை)

"இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. பலிராம் பஹுத், இந்திய கொள்கைத் திட்ட கமிட்டித் தலைவர் திரு. பார்த்தசாரதி, அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் வெளியுறவுத்துறைத் தலைவர் திரு. ரொமேஷ் பண்டாரி ஆகியோர் செவ்வாயன்றுகூடி, இலங்கை விடயம் குறித்தும், இலங்கையில் அண்மையில் இடம்பெற்று வரும் நிகழ்வுகள் குறித்தும், இனப்பிரச்னை அடிப்படை விவகாரங்களில் இலங்கை அரசுக்கும் தமிழ்த் தலைவர்களுக்குமுள்ள கருத்து மோதல்களைக் குறைக்க இந்தியா எவ்வாறு உதவிகள் புரியலாம் என்பது பற்றியும் ஆராய்ந்தனர்" என சென்னை நாளேடு 'இந்து'வில் ஜி. கே. ரெட்டி எழுதியுள்ளார்.

இந்தப்பேச்சுக்களில் இந்திய நிர்வாகசீர்திருத்தங்களுக்கான துணை அமைச்சர் திரு பி. சிதம்பரமும் கலந்து கொண்டார். இலங்கை இனப்பிரச்னை குறித்து நன்கு அறிந்தவரான இவர், இனப்பிரச்னையைத் தீர்ப்பதில் பயனுள்ள கருத்துக்களை முன்வைத்துள்ளதாகவும் ஜி. கே. ரெட்டி மேலும் எழுதியுள்ளார்.

அமைச்சர் ஹமீத், இலங்கைத் தரப்பிலான ஆலோசனைகளை எழுத்து மூலமாகவே கொண்டுவருவார் என்றும்,

[11ம் பக்கம் பார்க்க]

### சூட்டுக்கு பலி

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு ரயில் நிலைய ரைம் கீப்பர் நேற்றுமாலை துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானர் 30 வயதுடைய ஜோன்பிள்ளை என்பவரே பலியானவராவார். [ய-மா]

தம்புபபலியில்

### படையினர் - போராளிகள்

## நேரடி மோதல்!

மூதூர்]

கட்டைபறிச்சான் பகுதியில் தம்புப்பலி என்னுமிடத்தில் ஆயுதப் படையினருக்கும் போராளிகளுக்குமிடையில் நேரடி மோதல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

இப்பகுதியில் ரோந்து சென்ற ஆயுதப்படையினருக்கும் போராளிகளுக்குமிடையே இடம்பெற்ற இம்மோதலின் பின்னர் ஆயுதப்படையினர் முகாமுக்குத் திரும்பிவிட்டனராம்.

இம்மோதலின்போது ஏற்பட்ட சேதவிபரம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. [மா]

### அகதிகளைத் தாக்கி அம்மணமாக விரட்டினர்!

(திருகோணமலை)

நிலாவெளியிலுள்ள அகதி முகாம்களிலிருந்து திருமலை நகரை நோக்கிச் சென்றவர்கள் 3ம் கட்டை வீதித் தடை முகாமைச் சேர்ந்த ஆயுதப்படையினர் சோதனையிட்டபின்னர் தம்மை கடுமையாகத் தாக்கியதாகப் பிரஜைகள் குழுவுக்குப் புகார் செய்துள்ளனர்.

புத்தாண்டுத் தினத்தை முன்னிட்டு, தங்கள் வீடுகளைப்

(12-ம் பக்கம் பார்க்க)

### புத்தாண்டை முன்னிட்டு 15ம், 16ம் திகதிகளில் விசேஷ ரயில்சேவை!

[யாழ்ப்பாணம்]

புதுவருடத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்துக்கு கொழும்பிலிருந்து வந்த பிரயாணிகளின் நன்மைகருதி வவனியாவிலிருந்து கொழும்பு செல்வதற்கு இரண்டு ரயில் சேவைகள் 15ம், 16ம் திகதிகளில் நடைபெறவுள்ளன

[11ம் பக்கம் பார்க்க]

### அக்கினி ஹோத்திரம்!!

உலக நன்மையை முன்னிட்டு ஸ்ரீ காமகோடி சங்கராசாரிய சுவாமிகள், ஒரு கோடி ரூபா நிதி திரட்டி அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் தினந்தோறும் இரண்டு வேளை அக்கனி ஹோத்திரம் செய்யத் திட்டமிட்டுள்ளார். அக்கினி ஹோத்திரம் செய்வதால் சுற்றுச் சூழல் தூய்மை அடைவதுடன வளமும் சாந்தியும் பெருகுமென்பது சாஸ்திரம். [கெ]

## "இலங்கையின் இன்றைய சூழலால் இந்திய பாதுகாப்புக்கு ஆபத்து!

### சென்னையில் 'ரொமேஷ்' அச்சம்!

(சென்னை)

"இலங்கையில் இன்றுள்ள சூழ்நிலை இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சத்தையும், அபாயத்தையும் ஏற்படுத்துவதாக உள்ளது. எனினும், இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணுவதில் இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி வெகு உறுதியாக உள்ளார்."

அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியின் நூற்றாண்டு விழாவினைச் சிறப்பாகச் சித்தரித்தமைக்காக நாடாளுமன்ற உறுப்பினரும், பிரபல நர்த்தகியுமான ஸ்ரீமதி வைஜயந்தி மாலாவுக்குப் பாராட்டுத் தெரிவிக்கும் நிகழ்ச்சியில்கலந்து கொண்டு உரையாற்றுகையில், முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலரும், காங்கிரஸ் (ஐ) கட்சியின் வெளியுறவுப் பிரிவு தலைவருமான திரு ரொமேஷ் பண்டாரி மேற்கண்டவாறு கூறினார்.

இதே வேளையில் திரு.

[11ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

இரண்டு கிறைன்டிங் மில், இரண்டு மோட்டார், ஒரு அல்லர் விற்பனைக்குண்டு. M. தயாளநிதி, மல்லிகா ஸ்ரோர்ஸ் அருகே, ஆவரங்கால். [C 1678]

நல்ல நிலையில் உள்ள FISHER வீடியோ டெக் விற்பனைக்குண்டு. தொடர்பு: சந்திரன் மோட்டார் கரஜ் வீரமாகாளி அம்மன் கோவிலடி, நல்லூர். C 1752

ஒலிப்பதிவு செய்யப்பட்ட கசெற்: [1] திருச்செந்தூர் கார்த்திகேய சுப்ரபாதம், ஸ்கந்தஷஷ்டி கவசம், ஸ்கந்த குரு கவசம். [2] சிவபுராணம்- Dr. சேலம் ஜெயலட்சுமி [விருத்தம்], பஞ்சபுராணம், பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [C 1717]

நாஷனல் கலர் T. V. 14'' புதியது. மினிசினிமாவுக்கான 42'' லென்ஸ் (Made in Japan) Beam Scope, Brother தட்டச்சு இயந்திரம் (ஆங்கிலம்) புதியது விற்பனைக்கு உண்டு. தொடர்பு; S. ஸ்ரீனிவாசன், 43, நீதிமன்ற வீதி, மல்லாகம். (C 1694)

வீட்டுத் தளபாடங்கள், Imported Beds, மெத்தைகள், கண்ணுடி மேசைகள், கசற் றேடியோ, Electrical Cookers, Ice Flask, Hitachi குளிர்சாதனப் பெட்டிகள், றெடிமேட் உடுப்புகள், எழுதுமேசைகள், கிளாஸ் வகைகள், Tea Sets, Formica சாப்பாட்டு மேசைகள், Verandah Chairs, பிரம்பு கதிரைகள், பெரியமரம்அரியும் வாள், மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு. பத்மநாதன், ஆடியபாதம் றோட், திருநெல்வேலி சந்திக்கும் மருத்துவக் கல்லூரிக்கிடையில். (C1702)

நல்ல நிலையில் உள்ள 84 ஸ்ரீ 6723 இலக்கம் உடைய Bajah ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. தொடர்பு;: J. ஜெகதீசன், 131/4, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் or வீரமாகாளி அம்மன் கோவிலடி, சந்திரன் மோட்டோர் கராஜ். [C 1726]

நான்கு மாதக் கோழிக் குஞ்சு ஐம்பது உடன் விற்பனைக்குண்டு. மொத்தமாக வாங்க விரும்புவோர் நேரில் வரவும். [நோயற்றது]. கலைஞானி, 11/7, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். [C1735]

Love Birds பல வர்ணங்களில் கூட்டுடனும் தனியாகவும் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்க: J. A. Andrew, நில அளவையாளர், 16/2, முதலாம் ஒழுங்கை, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (அருள் ஆச்சிரமம் முன்பாக.) (C 1738)

சிங்கர் தையல் மெஷின், றேடியோ, நவீன கமரா, Kenwood Chef, Bemax Blender, Ceiling Fan, வீணை, மற்றும் வீட்டுத்தளபாடங்கள், பித்தளைப்பொருள்கள் உடன் விற்பனைக்குண்டு. பத்மநாதன், ஆடியபாதம் றோட், திருநெல்வேலி சந்திக்கும் மருத்துவக்கல்லூரிக்குமிடையில். [C 1733]

## விற்பனைக்கு

புத்தம்புதிய நஷனல் வீடியோ டெக் NV 370 யும் NV 450 யும் திருத்திபாவிக்கக் கூடிய நிலையில் 'பிலிப்ஸ் 27' கலர் டெலிவிஷனும் விற்பனைக்குண்டு. ராதா, 21, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். C 1753

மல்லாகம் கோட்டைக்காடு முருகமூர்த்தி கோவிலுக்கு அருகாமையில் இரண்டு பரப்புக்காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: செ. செல்வரத்தினம், 'சுகுண பவனம்' (வல்லிபுர நாதர் கோவிலுக்கு அருகில்), கோண்டாவில் வடக்கு, கோண்டாவில். C 1748

''பொமனேரியன்'' வெள்ளை, பிரவுண் நிற நாய்க்குட்டிகள் தடுப்பு ஊசி போடப்பட்டு, பூச்சி மருந்து கொடுக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: த. சிதம்பரநாதன் முன்னுள் நல்லூர் M. P. காரியாலயம், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு. C 1756

ஊரெழு அம்மன் கோவிலருகே யாழ்ப்பாணம் பலாலி றோட்டிலிருந்து இரண்டாவது 15 பரப்பு தோட்டக் காணி, முழுமையாகவோ, சிறு துண்டுகளாகப் பிரித்தோ விற்பனைக்குண்டு. கோவில், கடைகள், பஸ்தரிப்பு, சிறந்த சுற்றுடல் முதலிய வசதிகள் உண்டு. வீடு கட்டவோ, உப உணவுப் பயிர் செய்யவோ, கோழி மாட்டுப்பண்ணை, Factory அமைகக சிறந்த காணி. விபரங்களுக்கு: சீ. இராசரத்தினம், உடையார் வீதி, ஊரெழு கிழக்கு, சுண்ணுகம் தொடர்பு கொள்ளவும். C 1718

## தேவை

Grade VI மாணவிக்கு விஞ்ஞானத்திலும், கணக்கிலும் Individual Tuition தேவை. தகைமையிலும் பார்க்க தனிப்பட்ட கவனம் முக்கியம். 150, மானிப்பாய் வீதி, உடுவில். [உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன்னுல்.] (C 1713)

பிரபல நிறுவனமொன்றில் பகுதி நேரம் வெளிக்கள வேலைகளையும் மிகுதிநேரம் அலுவலக வேலைகளையும் கவனிப்பதற்கு, ஏற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தட்டச்சு கணக்குப் பதிவு அனுபவம் விரும்பப்படும்; ஆனுல் அத்தியாவசியமல்ல. யாழ். நகருக்கு அண்மையில் வசிப்பவர்கள் மட்டும் 17ம் தேதிக்கு முன் முழுவிபரங்களோடு விண்ணப்பிக்வும். Dyn ads, 476, பிரதான வீதி, சுண்டுக்குளி. [A 574]

## வாடகைக்கு

தும்பளை பருத்தித்துறையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: விளம்பர இல. C- 1666 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C-1666]

## வாடகைக்கு

உரும்பிராயில் நவீன வசதிகளுடன் கூடிய பகுதிவீடு வாடகைக்குண்டு. சிறிய குடும்பம் விரும்பத்தக்கது. தொடர்பு: விளம்பர இல. C 1743, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C 1743]

## தவறிவிட்டது

ராஜசுந்தரம் மகேந்திரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் புகையிரத நிலைய வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (C 1709)

## கல்வி

க. பொ. த. [உயர்தர] 88 கலை/வர்த்தக வகுப்புக்கள் நடைபெறுகின்றன. Modern Education Center, Karaveddy [C-1669]

பாலர் ஆசிரியர் பயிற்சி நெறி - 1986. இன்னுஞ் சிலருக்கு இடமுண்டு. க.பொ, த. [சா/த] சித்தியடைந்த பெண்கள் விண்ணப்பிக்கலாம். குடாநாட்டுக்கு வெளியில் வசிப்போர் தபால் வழியும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், 42, பிரப்பங்குளம் வீதி, யாழ்ப்பாணம். [C 1749]

G C.E. (O/L)இல் கட்டாய பாடமாகிய கணிதத்தில் சித்தியெய்தாதவர்களுக்கு ஆரம்ப அறிவிலிருந்து விஷேட சித்திக்குக் கற்பிப்பதில் 17 வருட அனுபவமுள்ள ஆசிரியரினுல் வீடுகளிற் சென்று நுணுக்கமானமுறையில் குறைந்தகாலத்தில் கற்பிக்கப்படும். மற்றும் O/L.), (A/L.) சகல பாடங்களும் பட்டதாரி ஆசிரியர்களினுல் கற்பிக்கப்படும். விலாசத்துடன் கடிதமெழுதவும் அல்லது காலை 8 00 மணிக்குள் நேரடியாகச் சந்திக்கவும். ஆறுமுகநாதன், No 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. C 1724

## மணப்பந்தல்

கனடாவில் நிரந்தமாக பணிபுரிபவரும் பொறியியல் துறையில் இறுதிப்பரீட்சை எடுத்தவரும் 39 வயதுடைய வருமான ஏராளர் குலத்தை சேர்ந்த கிறீஸ்தவ மணமகனுக்கு ஆங்கிலத்தில் நல்ல தேர்ச்சிபெற்ற மணமகள் தேவை. விபரங்களுடன் விண்ணப்பிக்கவும் ஜாதகம் தேவையில்லை. C 1760, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். C 1760

இந்து வேளாள வயது 33 M.B.C க்கும், 32 மெக்கானிக்கல் எஞ்சினியருக்கும், 27 சிவில் எஞ்சினியருக்கும், 32 IC.M.A.க்கும், 30அமெரிக்கா எஞ்சினியருக்கும், 30 கனடா கிளாக்கிற்கும், 30, 40 சவுதி மணமக்களுக்கும், 28 அச்சுக்கூட மனேஜருக்கும், 28 சைக்கிள் கடைமனேஜருக்கும், 25 மினிவான் சொந்தக்காரருக்கும் மணப்பெண்கள் தேவை. விண்ணப்பிக்கவும். எமது புத்தாண்டு வாழ்த்துக்கள். மங்கள எஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். C 1755

## வகுப்புகள்

O/L 86 Distinction Credits கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம கற்பிக்கப்படும். B. sc 85, சிவன்கோவிலடி, திருநெல்வேலி. [C 1663]

9, O/L, A/L பல்கலைக்கழக மாணவ மாணவிகளுக்கான விஷேட ஆங்கில வகுப்புகள் ஆரம்பம் 16-4-86. விபரங்களுக்கு நேரில் வரவும். ஹரி ஹரன் என்ரபிறைஸ், 337, பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். [C 1751]

[1] வயறிங் - 1½ மாதம், [2] மோட்டார் றீவைண்டிங் - 3 மாதம், [3] City and Guilds of Loudon Institute பயிற்சிகள் 18-4-86 ஆரம்பமாகின்றன. ஒமேகா, மானிப்பாய்வீதி, யாழ்ப்பாணம். [ஈழநாட்டிற்கு எதிரில்] [C 1729]

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### அ. செ. இரத்தினம்

மலர்வு: 14-01-1914

உதிர்வு: 16-03-1986

எங்கள் குடும்பத்தின் தந்தையாய், தாயாய், ஒளிவிளக்காய் அன்புடனும் பாசத்துடனும் வாழ்ந்து எம்மை வாழ வைத்த தெய்வமே உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அன்னுரின் இல்லத்தில் இன்று (13-4-86) பகல் 11-00 மணியளவில் வீட்டுக்கிருத்தியம் நடைபெறும். இந்நிகழ்ச்சிகளில் பங்குபற்றி அன்னுரின் ஆத்மசாந்திக்கு பிரார்த்திக்குமாறு வேண்டுவதோடு எமது துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பலாலி வீதி,
கோண்டாவில். C 1723

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
இலங்கை.

## பராமரிப்புத்துறை வேலைத்தளம் (தளம் II) அமைத்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பராமரிப்புத்துறை வேலைத்தளம்(தளம் II) அமைப்பதற்கு பொறியிடப்பட்ட கேள்விகள் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரரிடமிருந்து கோரப்படுகின்றன. ஒப்பந்தகாரர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அல்லது யாழ். கட்டிட திணைக்களத்தில் ஐந்து இலட்சத்துக்கு மேற்பட்ட தொகைக்கு பதிவு செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்கள் வரைபடங்கள் போன்ற விபரங்களை பல்கலைக்கழக வேலைப் பொறியியலாளரிடமிருந்து 25-04-86ம் திகதிவரை பெற்றுக்கொள்ள முடியும். விபரங்களுக்கான வேண்டுகோளுடன் 500/-க்கு காசுக்கட்டளை அனுப்பப்படல் வேண்டும். கேள்விகளுக்கு விண்ணப்பிப்பதற்கான முடிவுத் திகதி 30-04-86 முற்பகல் 10-மணி ஆகும். விண்ணப்பக் கடித உறையின் இடதுபுற மேல் மூலையில் UJ/YA/PL/02 என்ற இலக்கம் குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

பதிவாளர்.
A-580

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
இலங்கை.

## விளையாட்டு மைதானம் மட்டப்படுத்துதல்

பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தை மட்டப்படுத்துவதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரரிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் யாழ்ப்பாண மாநகரசபை அல்லது நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகியவற்றில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்கள் வரைபடங்கள் போன்ற விபரங்களை பல்கலைக்கழக வேலைப் பொறியியலாளரிடமிருந்து 25-04-1986ம் திகதி வரை பெற்றுக்கொள்ள முடியும். விபரங்களுக்கான வேண்டுகோளுடன் 100க்கு தபாற் கட்டளை/காசுக்கட்டளை அனுப்பப்படவேண்டும். கேள்விகள் விண்ணப்பிப்பதற்கான முடிவுத்திகதி 30-04 1986 முற்பகல் 10-00மணி ஆகும். விண்ணப்ப கடித உறையின் இடதுபுற மேல்மூலையில் UJ/YA/PL/02 என்ற இலக்கம் குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

பதிவாளர்.
A-578

## அறிவித்தல்

சுஸ்தூரியார் வளவு வைத்திய சிரோன்மணி க. பரராசசிங்கம் அவர்களின் ஞாபகார்த்த வைத்தியசாலை அன்னுரின் புத்திரன் சித்த ஆயுர்வேத வைத்தியர் ப. இரகுநாதன் R. S. M. P. (Ceylon) அவர்களால் தொடர்ந்து நடாத்தப்படும் என்பதை இத்தால் அறியத்தருகிறோம்.

வைத்தியர் ப. இரகுநாதன்,
93/21, இந்துமளீர் ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (C1668)

# 'படுகொலைகள் நிறுத்தப்பட்டு பிரச்னை தீர்க்கப்பட வேண்டும்'

## சென்னையில் தொண்டமான்

[சென்னை]

''இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் தினம்தினம் கொல்லப்பட்டு வருகிருர்கள். இப்படுகொலைகள் நிறுத்தப்பட்டு இனப்பிரச்னைக்கு உடனடியாக தீர்வு காணப்படவேண்டும்'' என்று இலங்கை கிராமியக் கைத்தொழில் அமைச்சர் திரு. தொண்டமான் திருச்சிராப்பள்ளியில் நிருபர்கள் மத்தியில் பேசும்போது தெரிவித்தார்.

இந்திய மத்திய அரசு, தமிழ்நாடு அரசு, தமிழர்விடுதலைக் கூட்டணி, மற்றும் விடுதலை இயக்கங்கள் இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கான பொதுக் கருத்தொன்றை தன்னிடம் தெரிவித்தால் அதனை ஜனதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தனவிடம் சமர்ப்பித்து அதனை அவர் ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கான முயற்சியெடுப்பேன் என்றும் திரு. தொண்டமான் தெரிவித்தார். [து]

## ஸார்ஜா கிரிக்கெட்:

## இந்திய, பாகிஸ்தான் கோஷ்டிகள் வெற்றி

[சார்ஜா]

சார்ஜாவில், அவுஸ்திரேலியா- ஆசிய வெற்றிக்கிண்ணத்துக்காக இருதினங்களுக்கு முன் ஆரம்பமான ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இந்தியாவும் பாகிஸ்தானும் வெற்றி பெற்றுள்ளன.

### இந்தியா வெற்றி

இந்தியாவுக்கும் நியூஸிலாந்துக்குமிடையில் நடைபெற்ற முதல்நாள் போட்டியில் இந்தியா வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து, 132 ஓட்டங்களையும், இந்தியா 134 ஓட்டங்களையும் பெற்றன.

### பாக. வெற்றி

பாக்கிஸ்தானுக்கும் அவுஸ்திரேலியாவுக்குமிடையில் நேற்று நடைபெற்ற கடும் போட்டியில் ஈற்றில் பாகிஸ்தான் 8 விக்கெட்டுகளால் வெற்றுபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியக் கோஷ்டி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 202 ஓட்டங்களைப்பெற்றது.

பாகிஸ்தான் கோஷ்டி 50 ஓவர்களில் இரண்டு விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 206 ஓட்டங்களைப் பெற்றது. ஆரம்ப துடிப்படி வீரர்களான வமுடாஸார் நஸாரும், மோஷிங்கானும் முறையே 95' 96 ஓட்டங்களைப் பெற்றனர். ரமேஷ் ராஜா ஆட்டமிழக்காது 57 ஓட்டங்களை பெற்ருர். பாகிஸ்தான் கோஷ்டி தனது வெற்றி ஓட்டத்தைக் கடைசி ஓவரின் கடைசிப்பந்து வீச்சிலேயே பெற்றது குறிப்பிடத்தக்கது.

### இன்றைய மோதல்

இலங்கை கோஷ்டியும் இந்தியக் கோஷ்டியும் இன்று மோதுகின்றன. [வி]

## அத்தியடி பிள்ளையார் தேர்

[யாழ்ப்பாணம்]

அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராச வீரகத்திப் பிள்ளையார் கோவில் தேர்த் திருவிழா 14ம் திகதி திங்கட்கிழமையும் தீர்த்தத் திருவிழா 15ம் திகதி செவ்வாய்க்கிழமையும் நிகழும்.

இம்மாதம் 6ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவரும் இம் மகோற்சவக்குருக்களாக பிரமஸ்ரீ கி. நாராயணக் குருக்கள் இருந்து கிரியைகளை நிறைவேற்றி வருகின்ருர். (ப

## ஹாட்லி 'ஜி. சி. ஈ' பெறுபேறுகள்

[புலோலி]

அண்மையில் பரீட்சைத் திணைக்களத்திஞல் வெளியிடப்பட்ட க. பொ. (சாதா) தரப் பரீட்சை முடிவுகளில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலிருந்து தோன்றிய இரண்டு மாணவர்கள் எட்டுப் பாடங்களிலும் விஷேட சித்திகளைப் பெற்றுள்ளனர். பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி மாணவி ஒருவர்எட்டுப் பாடங்களிலும் விஷேட சித்தி பெற்ருர்.

ஹாட்லிக் கல்லூரியிலிருந்து தோற்றிய 68 மாணவர்கள் கணிதத்தில் விசேட சித்திகளையும் 44 மாணவர்கள் தமிழ் மொழியில் விசேட சித்திகளையும் 69 மாணவர்கள் சமயத்தில் விஷேட சித்திகளையும் 20 மாணவர்கள் விஞ்ஞானத்தில் விஷேட சித்திகளையும் 07 மாணவர்கள் ஆங்கிலத்தில் விஷேட சித்திகளையும் பெற்றுள்ளனர்.

இரண்டு மாணவர்கள் ஏழு விசேட சித்திகளையும் ஒரு திறமைச்சித்தியையும் நாலு மாணவர்கள் ஆறுவிஷேட சித்திகளையும், நாலு மாணவர்கள் ஐந்து விஷேட சித்திகளையும் பத்துமாணவர்கள் நாலு விஷேட சித்திகளையும் இரண்டு மாணவர்கள் எட்டு திறமைச்சித்திகளையும் பெற்றுள்ளனர்.

## மருதடி விநாயகர் விசேட தீப ஆராதனையும் ரதோற்சவமும்

(யாழ்ப்பாணம்]

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் புதுவருடப் பிறப்பிறப்பை முன்னிட்டு இன்றுமாலை5மணிக்கு வசந்த மண்டப பூசையும், விநாயகர் சதுர்த்திப்பூசையும் நடைபெற்றபின் எம்பெருமான் வீதிவலம்வரும் காட்சியைத் தொடர்ந்து 14ம் திகதி அதிகாலை 12-20 மணிக்குப் புதுவருட விசேட தீப ஆராதனை நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

14ம் திகதி காலை 7 மணிக்கு ஸ்தம்ப பூசையும், 9 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் நடைபெற்றபின் 10 மணிக்கு விநாயகப்பெருமான் சித்திரத் தேரில் வீதிவலம் வருவார்.

15ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தஉற்சவம் நடைபெறும். இதற்கான ஒழுங்குகள் ஆலய பரிபாலகர்களிஞல் செய்யப்பட்டுள்ளன.

## கைலாசபதி நூலகம் திறப்பு விழா

[யாழ்ப்பாணம்]

புத்தூர் வேம்பிராய் கிராமத்தில் அமைக்கப்பெற்றுள்ள 'கைலாசபதி நூலகம்' நாளை திங்கட்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி பதிவாளர் திரு, இ. முருகையஞல் திறந்துவைக்கப்படும்.

அமரர் கைலாசபதியின் உருவப் படத்தை இலங்கை கம்யூனிஸ்ட்கட்சியின் (இடது) பொதுச் செயலாளர் திரு. கே. ஏ. சுப்பிரமணியம் திரை நீக்கம் செய்துவைப்பார்.

கலைமதி சனசமூக நிலையத் தலைவர் திரு. கா. கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறும். இத்திறப்பு விழாவில் அறிஞர்கள் பலர் உரையாற்றுவார்கள். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## அன்பளிப்பு

[உடுவில்]

உடுவில் தெற்கு சத்தியபுரம் சிறுவர் பராமரிப்பு நிலையப் பிள்ளைகளின் பொழுதுபோக்கு விளையாட்டு நிகழ்ச்சிகளுக்கென ஊஞ்சல், சர்க்கிஸ் பலகை, ராட்டினம் போன்ற பல விளையாட்டு உபகரணங்களை நிலையப் பொறுப்பாளர் திருமதி ஏ. ஆர். தம்பியப்பாவிடம் பிஷப் அம்பலவாணர் அவர்கள் அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

## இவ்வாரம் எப்படி?

### இன்று

மாதம்: பங்குனி
திகதி: 31(1986-04-13)
கிழமை: ஞாயிறு
திதி: சதுர்த்தி மு. இ. வரை
நக்ஷத்திரம்: ரோகிணி முழுநாளும்

### மேடம்

அவசரம் வேண்டாம். உறவு முறைகளில் பிளவு தோன்றலாம். நிதானமாக நடந்தால் அமைதி நிச்சயம்.

### இடபம்

குடும்பத்தில் பூசல்கள் தோன்றி மறையும். உடல் நலமும் சிறிது பாதிக்கப்படும். உணவு விடத்தில் கவனம் வேண்டும்.

### மிதுனம்

நீண்டநாள் எதிர்பார்த்த விடயம் நிறைவேறும், பெரிய இடத்தில் சகவாசம். செல்வாக்கைத்தேடித் தரும். வரவிலும் உயர்வு காணும். வியப்பூட்டும் செய்திக்கும், புதிய நண்பர்களின் உறவுக்கும் இடமுண்டு.

### கடகம்

தொடங்கிய விடயம் பாதியில் தடைப்படும். பொருட்சேலவுக்கும் இடமுண்டு. குடும்பத்தில் உடல் நலக்குறைவு தோன்றும் சகோதர வழியால் வரவுக்கும் இடமுண்டு.

### சிங்கம்

தனவரவுக்கு இடமுண்டு. சிலருக்கு வாகன விருத்தியுண்டு. குடும்பத்தில் தென்றல் வீசும். கல்வியிலும் முன்னேற்றமுண்டு.

### கன்னி

இனத்தவர் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். பிள்ளைகளின் நடவடிக்கை பெருமையைத் தேடித்தரும். வீட்டிலும் நல்ல சூழ்நிலை நிலவும். சமயோசித நடவடிக்கையின்மூலம் எதையும் வெற்றி காண்பீர்கள்.

### துலாம்

செலவினங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும். எதிர்பாராத இடப்பிரிவுக்கும் இடமுண்டு. நண்பர்களிடம் கவனமாயிருக்கவும்.

### விருச்சிகம்

இல்லத்தில்இனிமை தவழும் வெளியிடத்துத் தொடர்புகள் பெருகும். இனசன உதவிகள் பெருகும். ஆரம்பத்தில் முட்டுக்கட்டை போட்டவர்கள் ஆதரவு கொடுப்பார்கள். காதல் ஜோடிகளுக்குப் பொன்ஞன வாரம்.

### தனுசு

பணத்தைக் கொடுத்துப் பகையைச் சம்பாதித்துக் கொள்ளுவீர்கள். தொழில் துறையிலும் சோர்வுதென்படும். நண்பர்கள்மூலம் புதிய தொல்லைகளுக்கும் இடமுண்டு. நிதான புத்தியுடன் நடக்கவும். புதிய முதலீடுகளை ஒத்திவைக்கவும்.

### மகரம்

குருவின் ஆசியுடன் குறிக்கோளில் வெற்றிகாண்பதற்கு இடமுண்டு. நேர்முகப்பரீட்சை வெற்றிதரலாம். பிதாவழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும்.

### கும்பம்

ஓவியர்கள் வாழ்க்கை ஒளிமயமாகும். முயற்சியால் முன்னேற்றம் உண்டு. இனபந்துகளுடன் தொடர்புகள் பெருகும். புதிய உடன்படிக்கை மூலம் நல்ல திருப்பம் ஏற்படும்.

### மீனம்

பணம் புதிய நண்பர்களைக் கொண்டுவரும். மக்கள் பணியில் ஈடுபாடு காட்டுவீர். அறிவாளிகளின் ஆதரவும் உண்டு, பூமிப்பிணக்குகள் நிவர்த்தியாகும். எதிர்பாராத வரவுகளுக்கும் இடம் உண்டு.

திருமலை
க.வே.ரவீந்திரன்




விலை ரூபா 45/- க்கு மேல

- கேசச் சாயத்துறையில் ஒரு நூற்ருண்டு அநுபவம் வாய்ந்தவர்களால் தயாரிக்கப்படுகிறது.
- இன்று உலகம் முழுவதிலும், இலங்கையிலும் பெரும்பான்மையானேர் உபயோகிக்கும் ஒரே கேசச் சாயம்.
- சாயம் பூசியபின் எண்ணெய், சவர்க்காரம் ஷம்பு எதனையும் பயமின்றி உபயோகிக்கலாம்.
- உங்கள் கேசத்திற்குப் பொருத்தமான மூன்று வர்ணங்கள், ஷாம்பு வடிவமுட்பட.

உங்கள் கேசத்தினைப் பராமரிப்போர்

ஏக இறக்குமதியாளர்கள்:

ராதா டிரேடிங் கம்பெனி லிமிட்டெட்

25, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு-13. தொலைபேசி: 36860

# அக்ஷயப்பிறப்பும் மங்கலசாந்தியும்

மங்களகரமானபுதுவருடமாகிய அக்ஷய வருடம் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு12-20 மணியளவில் பிறக்கின்றது. ஞாயிறு இரவு 8-20 மணி முதல் 4-20 மணிவரை உள்ள நேரம் வருடப்பிறப்புப் புண்ணியகாலமாகும்.

இப்புண்ணிய காலத்தில் மருத்துநீர் தேய்த்து நீராடல், சிவப்புக்கரை அல்லது மஞ்சள் கரை உடைய தூய ஆடை அணிந்து குலதெய்வ வழிபாடு, தான தருமம் செய்தல், குரு, பெற்றோரை வணங்கி ஆசிபெறுதல், நிறைகுடம் கண்ணாடி முதலிய மங்கலப் பொருள்களைத் தரிசித்தல் முதலிய நற்காரியங்களில் ஈடுபடுதல் வேண்டும். வருடப்பிறப்பினை ஒட்டி சூரியனைப் பொங்கலிட்டு வழிபடல் பெரியோரைச்சந்தித்து ஆசிபெறல் முதலிய கருமங்களைத் திங்கட்கிழமை மேற்கொள்வதே பொருத்தமாகும்.

## மருத்துநீரின் மகத்துவம்

வருடம் பிறக்கின்றநேரம் சில நட்சத்திரக்காரருக்குப் பொருந்தாமலிருக்கும். இப்படிப் பொருந்தாத நட்சத்திரங்களை சங்கிரமதோஷநட்சத்திரங்கள்என்பர் சங்கிரதோஷ நட்சத்திரங்களாக இவ்வருடப் பிறப்பு நேரத்துக்கு அமைவன கார்த்திகை பின்முக்கால், ரோகிணி, மிருகசிரிடத்துமுன்னரை, அத்தம், சித்திரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால் திருவோணம் என்னும் நட்சத்திரங்களாகும். இந்நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு வருடப்பிறப்பு நேரமும் அதனையொட்டிய புண்ணிய காலமும் பொருத்தமில்லை என்று கருதவேண்டுமேயன்றி இவ்வருடம் முழுவதுமே தமக்குப் பொருந்தா வருடமென மயங்கலாகாது இந்தத் தோஷ நட்சத்திரத்திற் பிறந்தவர்கள் மருத்து நீர் தேய்த்து நீராடல், குலதெய்வவழிபாடு செய்தல் தான தருமம் செய்தல் என்பவற்றை அக்கறையுடன்செய்து தமக்கு இருக்கக் கூடிய தோஷத்தில் பெரும்பகுதியை நீக்கிக் கொள்ளலாம்.

பலவகையான புனிதத் தன்மையும் தேகாரோக்கியத்தை உண்டு பண்ணும் சிறப்புப் பொருந்தியதே மருத்துநீராகும். மருத்து நீர் தேய்த்து நீராடுவதில் தோஷ நட்சத்திரங்களுக்கு உரியவர் மட்டுமன்றி எல்லோரும் ஆர்வம் கொள்வது நன்று.

இக்காலத்தில் பலசந்தர்ப்பங்களில் மருத்துநீர்காய்ச்சுவதற்குத் தேவையான பொருள்களில் ஒருசிலவற்றை மட்டும் கொண்டு தயாரிக்கப்படும் மருத்துநீரே கிடைக்கின்றது. இவ்விடயத்தில் பூரணஅக்கறை செலுத்தி இதில் சம்மந்தப்பட்டவர்களை நல்ல மருத்து நீர் காய்ச்சச் செய்தும் இயலாதவிடத்துத் தாமே மருத்து நீர் காய்ச்சுவதும் நன்று.

தாழம்பூ, தாமரைப்பூ, பூமாதுளம்பூ, துளசி, விஷ்ணுகிராந்தி, சீதேவியார் செங்கழுநீர், வில்வம், அறுகு, பீர்க்கு பால், கோசலம், கோரோசனை, மஞ்சள், மிளகு, திற்பலி, பச்சைக் கற்பூரம், சுக்கு, என்னும் பொருள்களை இட்டுக் காய்ச்சுவதேமருத்துநீராகும். இவற்றில் கிடைப்பது அருமையாக உள்ள பொருள்களின் பூக்களுக்குப் பதிலாக அதன் இலைபோன்ற ஏதாவது ஒன்றைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமேயன்றி கிடைக்காத பொருளைக் விட்டுக் கிடைத்த ஒருசில பொருள்களை மட்டும்சேர்த்துத் தயாரிப்பது சரியானமருத்து நீராகாது.

இம்மாதம் 15-ம் திகதி திங்கட்கிழமை பகல் 9-40 மணிமுதல் 12-10 மணிவரையும் 17ம் திகதி புதன் கிழமை 10-49 மணி முதல் 11-53 மணிவரையும் உள்ள நேரங்கள் கைவிஷேசத்திற்குரிய புண்ணிய நேரங்களாகும்.

வருடப் பிறப்பினையொட்டி நல்ல சிந்தனைகளைச் சிந்திப்பதும் வளர்த்துக் கொள்ளுவதும் பெரியோர் குரு பெற்றோர் ஆகியோரை வணங்கி அவர்களது வாழ்த்துக்களைப் பெறுவதும் துன்புறுபவர் எத்தகைய நிலையிலிருந்தாலும் எல்லோருக்கும் இரங்குவது அவசியமாகும்.

இரக்கங் கொள்ளல் அன்பு செய்தல் தெய்வ சிந்தனையில் அதிக நேரத்தைச் பயன்படுத்தல் என்பவற்றினால்மனதைப் பண்படுத்தி புனிதமாகும் மனிதசூழலே இன்பம் பெருக்கும் சூழலாக இருக்கும் பகைமை பொறாமை சுயநலம் போன்றவற்றைப் பேணிவளர்க்கும் சூழல் பதற்றத்தையும் அமைதி இன்மையையுமே உண்டுபண்ணிக் கொண்டிருக்கும் ஆதலால் தெய்வசிந்தனை முதலிய நல்லகாரியங்களை வருடப்பிறப்பு முதலிய சந்தர்ப்பங்களில் உண்டாக்கி வளர்ப்பதால் நம் சூழலும் சமூகமும் இன்பமடைய வாய்ப்பு ஏற்படும். விட்டுக்கொடுத்தல், மற்றவர் செய்யும் நன்மையை மனப்பூர்வமாக வரவேற்றல் என்னும் பண்புகளை தெய்வ சிந்தனையோடு வளர்க்க புதுவருட வேளையில் ஒவ்வொருவரும் உறுதிபூணல் நன்று.

வேயுறுதோளி பங்கன் எனத்தொடங்கும் பதிகத்தின் மூலம் கிரகதோஷம், பகை, அச்சம், துட்டம்ருக ஆபத்து, நோய், அரச பயம் முதலிய துன்பங்களிலிருந்து விடுபட்டு நன்மையடைய உமையொரு பாகராகிய சிவபெருமானையும் அவர் அடியார்கட்கு அருள் புரியக்கொண்ட திருக்கோலங்களையும் உள்ளத்தில் நினைந்து வணங்குதலே பெரும் சாந்தியாகும் என்னும் திருஞான சம்பந்தர் உபதேசத்தைக் கடைப்பிடித்து எல்லோரும் இன்புறலாம்.

**பண்டிதர் தி. பொன்னம்பலவாணர்**

# டாக்டர்களும் மனிதர்களே!

அல்லும் பகலும் எந்நேரமும் கடமையைக் காத்திருக்கும டாக்டர்களை மக்கள் தெய்வமென மதிப்பதில் என்ன வியப்பு?

எதிர்பாராத சந்தர்ப்பங்களில் அவர்களின் பொறுப்பு மட்டுமல்ல கடமையும் அதிகரித்து விடுகிறது.

இன்று தாதிமாரில்லாது தாமே எடுத்துச் சுமக்கும் பணியில் பொறுமை இழக்கும் சூழ்நிலையை மட்டும் நாம் குறிப்பிடவில்லை. இந்த நாட்டின் மருத்துவ சேவையில் உள்ள குறைகள் அனந்தம்.

இதுபோன்ற, தாதிமாரோ, பயிற்சி பெறும் இளம் பெண் என்ற மணம்குணம் இல்லாது தனிமையில் தத்தளிக்கும் வேளைகளில் டாக்டர்களுக்கு இன்றியமையாத அஷ்டாவதானம் சோதனைக்குள்ளாகிறது.

இந்நிலையில் உறக்கமற்றிருந்த ஒரு குடும்பவைத்தியருக்கு நள்ளிரவில் ஒரு அவசர 'கோல்' வந்தது. ''டாக்டர் தயவுசெய்து உடனடியாக வரவேண்டும். எனது மனைவிக்கு அப்பென்டிசைற்றிஸ்; தாங்கமுடியாத வலியில் தவிக்கிறார்'' என்றார் கணவன்.

கண்விழித்து சற்றே யோசித்துவிட்டு குடும்ப பைலை தட்டிப்பார்த்தார். ''ஒன்றுக்கும் அஞ்சாதீர்; அது சாதாரண ஜீரணமின்மையால் ஏற்பட்ட கோளாறாகவிருக்கலாம்: விடிந்ததும் வருவேன்'' என்றார் டாக்டர்.

ஏக்கமுற்ற கணவன் மனைவியின் நிலைமை மோசமாவதைப் பார்த்து டாக்டரை வரும்படி மன்றாடினார். ''உடனடி ஆப்பரேஷன் தேவை ஐயா'' என்றார்.

பொறுமையிழந்த டாக்டர், கணவனுக்கு ஒரு நல்ல டோஸ்கொடுத்தார். ''உமது மனைவியின் அப்பென்டிக்ஸ் இரண்டு வருடத்துக்குமுன் நீக்கப்பட்டது நீர் மறந்து விட்டீர் போலும்; இன்னொன்று இருக்கமாட்டாதென்பதை நீரும் நானும் அறிவோம்'' என்றார்.

ஏமாற்றமடைந்த கணவன், ''ஐயா, நான் குறிப்பிடுவது இன்னொரு மனைவி; அதனை நீர் அறிந்திலீர்'' என்றார்.

# ஒரே நேரத்தில் ஒன்றுக்குமேற்பட்ட மருந்து ஹனிமனின் தத்துவத்திற்கு எதிரானது

நோயை மாற்றும் மருந்துகள் எல்லாம் நோயை உண்டாக்கும் தன்மை வாய்ந்தவை என்பதை முதலில் கண்டுபிடித்து அதனை அத்திவாரமாகக் கொண்டே ஹோமியோபதி கட்டி எழுப்பப்பட்டது. இயற்கையிலேயே இரண்டு ஒத்ததன்மையுள்ள வியாதிகள் சந்திக்கும் போது சக்திகூடியது சக்தி குறைந்ததை நிரந்தரமாக அகற்றுவதை டாக்டர் ஹனிமன்என்றமேதைகண்டுகொண்டார். ஆகவே இயற்கை நோயைப்போன்ற அறிகுறிகளை ஏற்படுத்தக்கூடிய மருந்தை, சக்தி கூடியதாக வீரியப்படுத்திக் கொடுக்கும் போது நோய் நிரந்தரமாக அகற்றப்படுகிறது. உதாரணமாக சக்திகூடிய சூரியனின் வெளிச்சத்திற்குமுன் மெழுகுதிரியின் வெளிச்சம் தெரியாமல் இருப்பது போல ஹோமியோபதி முறையில் நோய் அகற்றப்படுகிறது. ஒத்ததன்மையுடைய மருந்துகளினால் தான் நோய்கள் நிரந்தரமாக அகற்றப்படும்.

மற்றைய சிகிச்சை முறைகளில் நேர் எதிரான அறிகுறிகளை உண்டாக்கும் மருந்துகளே கொடுக்கப்படுகின்றன. மலச்சிக்கலுக்கு மலமிழக்கிகள், நித்திரையின்மைக்கு நித்திரையைத் தூண்டிவிடும் மருந்துகள், உடல் சக்திகுன்றிச் சோர்வடையும்போது கோப்பி, வைன் போன்றவற்றை அருந்தச்செய்வது போன்ற முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன இச் சிகிச்சை முறையால் மலச்சிக்கல் சற்றுக் குறைந்ததுபோல் உடனே காணப்பட்டாலும் அதற்கு அடுத்த நாட்களில் மிகமோசமாகி விடுவதையும் நோயாளி தினசரி மலமிழக்கிகளுக்கு அடிமையாவதையும் காணலாம். நித்திரையில்லாதவர்கள் பார்பிரியூரேற்ஸ் போன்ற மருந்துகளைப் பாவித்தவுடன் நித்திரை கொண்டாலும் மறுநாள் முதல்நாளைவிட மோசமான நித்திரையின்மையை அவதானிக்கக்கூடியதாக இருக்கும். ஆகவே தினசரி நித்திரை கொள்வதற்காக மாத்திரைகளையே தஞ்சமடைய வேண்டியநிலை ஏற்படுகிறது.

ஹோமியோபதி சிகிச்சை முறையில் மலச்சிக்கலுக்கு மலச்சிக்கலை ஏற்படுத்தக் கூடிய மருந்துகளே கொடுக்கப்படுகின்றன. வீரியப்படுத்தப்பட்ட மருந்துகளை சற்று சக்திகூடிய நிலையில் கொடுக்கும்போது மலச்சிக்கல் நிரந்தரமாக அகற்றப்படுவதுடன் அதன்பின் அம் மருந்தைத் தொடர்ந்தும் பாவிக்காமலே சீவிக்கக்கூடியதாகவும் இருக்கும் இதேபோல நித்திரையின்மைக்கும் ஆரோக்கியமானவர்களில் நித்திரையின்மையை உண்டாக்கும் மருந்தே கொடுக்கப்பட்டு அந்நோயாளி தொடர்ந்தும் மருந்து எடுக்காமலே நித்திரை கொள்ளக் கூடியதாகவும் இருக்கும். ஒத்ததன்மை உள்ள மருந்துகளையே ஒவ்வொரு நோயாளிக்கும் ஒரு உண்மையான ஹோமியோபதி வைத்தியர் கொடுக்கவேண்டும்.

சுமார் 3000 [மூவாயிரம்] மருந்துகள் தனித்தனியே ஆரோக்கியமான மனிதர்களுக்குக் கொடுத்து நிரூபிக்கப்பட்டு ஹோமியோபதி மெற்றீரியா மெடிக்கா என்றவடிவில் பிரசுரமாகி உள்ளன. ஹோமியோபதி சிகிச்சை வெற்றிபெற வேண்டுமானால் அறிகுறிகளுக்கேற்ப பொருத்தமான மருந்தை சக்தி கூட்டப்பட்ட [வீரிய] நிலையில் கொடுத்தால் நிச்சயம் வெற்றி கிட்டும்

இதைவிடுத்து உரிமைபதிவு செய்யப்பட்ட மருந்துகளை அதாவது கலவை மருந்துகளைப் பாவிப்பது ஹோமியோபதியின் அடிப்படைத் தத்துவத்திற்கே முரணானதாகும். இதனால் நோயை நிரந்தரமாக அகற்ற முடியாது. தற்காலிகமான சுகத்தையும் சாந்தியையும் கொடுக்கலாமே ஒழிய நோயை வேருடன் அகற்றமுடியாது. இதே காரணத்துக்காகத்தான் எமது அரச ஹோமியோபதி வைத்திய சபையினால் உரிமை பதிவு செய்யப்பட்ட மருந்துகளின் இறக்குமதி தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனெனில் ஒன்றுக்கு மேற்பட்ட மருந்துகளை ஒரே நேரத்தில் பாவிப்பது ஹனிமனின் அடிப்படைத் தத்துவங்களுக்கு எதிரானதாகும்.

உண்மையான ஹோமியோபதியர்கள் ஹனிமன் கூறிய வழிகளில் சென்று மக்களுக்கு சேவைசெய்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையச் செய்ய வேண்டும்.

**டாக்டர் தியாகராஜா பரமசிவம்**

# அமரரின் நினைவாக

## திறந்த வெளியரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா வித்தியாலய முன்னாள் அதிபர் அமரர் ச அம்பிகைபாகன் அவர்களின்ஞாபகார்த்தமாக வித்தியலய திறந்தவெளியரங்கு புதுமெருக்குகூட்டி அவரது பெயரைச் சூட்டுவதென பழைய மாணவர் சங்கம் முடிவெடுத்துள்ளது

ஆண்டுதோறும் அமரரின் நினைவாகபேச்சுப் போட்டிகளை நடாத்தி அவரின் பெயரால் பரிசுகள் வழங்க மேற்படி வித்தியாலய பழைய மாணவரும் பிரபல சட்டத்தரணியுமாகிய திரு. சோமசுந்தரம் முன்வந்துள்ளார். (உடு நி)

# புதிய ஆண்டு பிறந்ததே

உதய பானு எழுந்தது
உளத்தில் இருளும் அகன்றது
இதயந்தனில் இன்பத் தமிழ்
இதழில் முறுவல் மலர்ந்தது
நிதமும் இன்பம் கொழிக்கவே
நெஞ்சில் அமைதி பூக்கவே
புதிய ஆண்டு பிறந்தது
பூந்தமிழும் வாழ்கவே

— கவிமாமணி

# புதிய தடுத்துவைத்தல் வரி இருபதுவீத கழிவு அதிகமா?

வைப்புக்களிலிருந்து பெறப்படும் வட்டிவருமானத்தில் 20 % வரிக்கழிவை ஏற்படுத்தும் அதிகாரம் 1985-ம் ஆண்டு 56-ம் இல. உள்நாட்டு இறைவரித் திருத்தச் சட்டத்திஞல் இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. 1-4-86 தொடக்கம் இப்புதிய வரிமுறை அமுலுக்கு வருகின்றது. இதன் பிரகாரம் வங்கிகளோ, நிதிநிறுவனங்களோ தாம் வைப்பாளர்களுக்கு கொடுக்கும் வட்டியிலிருந்து 20 % வரிக்கழிவை கட்டாயமாக மாதாந்தம் அறவிட்டு, அடுத்த மாதம் 15-ம் திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டும். இந்த ஆண்டு [1986/87] தொடக்கம் வரவு செலவு திட்டத்தில் வழங்கப்பட்ட வரிச் சலுகைகளோடு இந்த வரிவிதிப்பை ஒப்பு நோக்கும் போது 20 % கழிவு அதிகமாக இருப்பதையும், இதனிலும் குறைவான வீதமாய் இக்கழிவு அமைந்திருந்தால் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் பல அசௌகரியங்களை குறைத்திருக்கலாம் என்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

1983/84 இல் ரூபா 12,000 ஆக இருந்த வரிவிலக்கு எல்லை, இந்த வருடம் ரூபா 27,000 ஆக உயர்த்தப்பட்டும் வரிப்படிகள் ரூபா 4800 லிருந்து ரூபா 24,000 ஆக விரிவாக்கப்பட்டும் இருப்பதை கீழே கவனிக்கலாம்.

### 1986/87 ம் ஆண்டுக்குரிய வருமானவரி அட்டவணை

| | வருமானம் | வீதம் | வரி |
|---|---|---|---|
| முதல் | 27,000 | — | வரிவிலக்கு |
| அடுத்த | 21,000 | 10 | 2,100 |
| ,, | 24,000 | 20 | 4,800 |
| ,, | 24.000 | 30 | 7,200 |
| ,, | 24 000 | 40 | 9,600 |
| | மிகுதி | 50 | ......... |

சேமிப்பும் முதலீடும் ஒருநாணயத்தின் இருபக்கங்கள் எனப்படும். எவ்வளவுக்கு எவ்வளவு சேமிப்பு அதிகரிக்கிறதோ அதே அளவு முதலீடும். அதன் காரணமாக ஒரு நாட்டின் அபிவிருத்தியும் வளர்ச்சியடையும் என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. இதனுலேயே அரசாங்கங்கள் சேமிப்பை ஊக்குவிப்பதற்கு பல தீவிர நடவடிக்கைகளை எடுக்கின்றன. இந்த நாட்டிலும் தேசிய சேமிப்பு வங்கியிலிருந்து

**ந. கருணை ஆனந்தன்**

கிடைக்கும் வட்டிவருமானத்திலிருந்து 3/1 பகுதிக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டமை இந்தக் கொள்கையின் பிரகாரம் அமைத்த ஓர் படியாகும். ஆனுல் புதிய தடுத்து வைத்தல் வரியானது சேமிப்பை ஊக்குவிப்பதற்குப் பதில் சேமிப்பை தேய்க்கும் ஓர் ஆயுதமாக அமைந்திருப்பதைக் காணலாம். (தேசிய) சேமிப்பு வங்கியிலிருந்து 2 கோடி 20 லட்சம் ரூபாவிற்கு மேலாக, இந்த வரி அமுலுக்கு வருவதற்கு முன்னரே, முதலீட்டாளரால் வெளியே எடுக்கப்பட்டமை இதற்கு ஓர் உதாரணம் ஆகும்.

மேற்குறித்த 20 % வரிக்கழிவு சிறிய நடுத்தர வருமானம் உடைய சேமிப்பாளர்களுக்கு, தேவையற்ற மனஉளைச்சலை உண்டுபண்ணியமையை பின்வரும் சூழ்நிலைகள் விளங்கப் படுத்துகின்றன.

#### சூழ்நிலை 1

ஓய்வுற்ற அரசாங்க உத்தியோகத்தர் இவருடைய மொத்தவருமானம், வரிக்கழிவு, வரிக்கொடுப்பனவுகள் கீழே தரப்பட்டுள்ளன:

**வரி ஆண்டு 1986/87**

| | வருமானம் | வரிக்கழிவு |
|---|---|---|
| 1. அரசாங்க ஓய்வூதியம் 12,000 | வரிவிலக்கு | |
| 2. நிலையான வைபபு வட்டி | 24,000 | 4,800 |
| 3. வாடகை | 6,000 | |
| 4. கமத்தொழில் | 15,000 | |
| மொத்த வருமானம் | 45 000 | |
| விடுதொகை | 27,000 | |
| வரிவிதிப்பிற்குட்பட்ட வருமானம் | 18 000 | |

| | |
|---|---|
| கட்ட வேண்டிய வரி 18000 × 10 ÷ | 1800 |
| கழிக்கப்பட்ட 20 % வரி | 4800 |
| பெறவேண்டிய மீளளிப்பு | 3000 |

இங்கே 5 % கழிவே [1200] போதுமானது.

#### சூழ்நிலை 2

வங்கி ஊழியர்

இவருடைய வரிக் கொடுப்பனவுகள் வருமாறு:

**வரி ஆண்டு 1986/87**

| | வருமானம் | வரிக்கழிவு |
|---|---|---|
| 1. சம்பளம் | 48,000 | 1,800 (Paye) |
| 2. வாடகை | 12,000 | |
| 3. கோழிப்பண்ணை | 28,000 | |
| 4. பங்கு லாபம் | 5,000 | 1,000 |
| 5. வட்டி (18 வயதிற்கு உட்பட்டமகனுடையது) | 24,000 | 4,800 |
| மொத்த வருமானம் | 117,000 | 7,600 |

| | | |
|---|---|---|
| கழி:- செலுத்திய வட்டி | 24 000 | |
| | 93,000 | |
| கழி:- வீடுகட்டிய கடன், காப்புறுதி, சகாயநிதி | 31.000 | |
| விடுதொகை | 27,000 | |
| | 58.000 | 58 000 |
| வரிவிதிப்பிற்குரிய வருமானம்...... | | 35,000 |
| கட்டவேண்டிய வரி | | |
| 21.000 x 10% | 2,100 | |
| 14,000 x 20% | 2.800 | |
| | 4,900 | |
| கழிக்கப்பட்டவரி | 7,600 | |
| மேலதிக கழிவு (மீளளிப்பு | 2.700 | |

இங்கே 10% கழிவே (2,400) போதுமானது.

#### சூழ்நிலை 3

* 18 வயதிற்கு மேற்பட்ட மணமாகாத பெண்
* தனது திருமணத்திற்காக 100,000 ரூபாவை நிலையான வைப்பில் வைத்திருப்பவர்

**வரி ஆண்டு 86/87**

| | வருமானம் | வரிக்கழிவு |
|---|---|---|
| 1. வட்டி | 24 000 | 4,800 |
| 2. வேறு வருமானம் | இல்லை | |
| மொத்த வருமானம் | 24 000 | |
| விடுதொகை | 27,000 | |
| வரிவிதிப்பிற்குரிய வருமானம் | இல்லை | |
| கட்டவேண்டிய வரி | இல்லை | |
| மேலதிக கழிவு (மீளளிப்பு) | 4 800 | |

இங்கே வரி கழிக்கப்படவேண்டிய அவசியமே இல்லை.

அடுத்து வெளிநாடுகளில் தொழில் செய்பவர்கள் இங்கே நிலையான வைப்புக்களில் முதலீடு செய்திருப்பார்களாயின் அவர்களின் நிலை பின்வருமாறு அமையும்:

#### சூழ்நிலை 4

* சவூதியில் 3 வருடங்கள் தொழில்
* தொடர்ச்சியாக 12 மாதங்களுக்கு மேல் இலங்கைக்கு வராதிருந்து, அதன்பின் வந்துபோபவர்.

**வரி ஆண்டு 1986/87**

| | வருமானம் | வரிக் கழிப்பு |
|---|---|---|
| 1. தொழில் வருமானம் (சவூதியில்) ரூ. 72,000 வரி விலக்கு | | |

(8ம் பக்கம் பார்க்க)

# எண்கள் செய்யும் ஜாலங்கள்

**சு மகாலிங்கம்**

எண்கள் பற்றிய ஆராய்ச்சி எப்போதும் கவர்ச்சி நிறைந்ததாகவும், சுவையூட்டுவதாகவும் இருந்து வந்திருக்கிறது. தமிழகத்தைச் சேர்ந்த கணித மேதை ஸ்ரீநிவாச இராமானுஜம் இத்துறையில் காட்டிய திறமை பல கணித அறிஞர்களை வியப்பிலாழ்த்தியது. எண்கள் ஒவ்வொன்றினதும் தன்மை பற்றிய அவரின் அபாரஅறிவைக்கண்ட அறிஞர்கள் ஒவ்வொரு எண்ணும் அவரின் நெருங்கிய நண்பர்கள் என்று பாராட்டியுள்ளனர். இங்கிலாந்தில் அவர்நோயுற்று மருத்துவமனையில் இருந்த போது நடந்த சம்பவத்தை எல்லோரும் குறிப்பிடுவர். நோயுற்று சோர்வுற்று இருந்த சமயத்திலும் அவரின் ஆற்றல் வெளிப்பட்ட அந்தச் சம்பவம் அவரின் மேதைத்தன்மையை விளக்குகிறது. அவரின் நலம் பற்றி விசாரிக்கச் சென்ற கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக கணிதப் பேராசிரியர் G H. ஹார்டி [Prof G H. Hardy] அவர்கள் தாம் வந்த டாக்சியின் எண் 1729 என்றும் அது அவ்வளவு சிறப்பான எண்ணல்ல வென்றும் கூறினுர். திரு. இராமனுஜம் அதனை உடனடியாக மறுத்து 1729 என்பது இருகனங்களின் கூட்டுத்தொகையாக இருவேறு வகையில் காட்டக்கூடிய மிகச் சிறிய எண் என்றுர். அதாவது:

$$1729 = 1^3 + 12^3 = 9^3 + 10^3$$

என்பதாகும். இங்ஙனம் தமிழகமேதை எந்த எண்ணின் இயல்புபற்றியும் அநாயாசமாகக் கூற வல்லவராக இருந்தார். இதற்குக் காரணம் ஒவ்வொரு எண்பற்றியும் அவர் நுட்பமாக ஆராய்ந்து அறிந்து வைத்திருந்தமையே.

இராமனுஜம் எண்களோடு நட்புப் பூண்டவராக இருந்தார். ஆனுல் கணித அறிஞர்கள் சில எண்கள் ஒன்றுக்கொன்று நட்புப் பூண்டவையாக இருக்கின்றன என்றனர். இவற்றை நட்பு எண்கள் [Amicable or Friendly numbers] என்றனர். நண்பன் என்பவன் யாரென்று கிரேக்கக் கணிதஅறிஞர் பைதகரசிடம் கேட்கப்பட்டபோது அவர் ''நானுக இருக்கும் இன்னுமொருவர். உதாரணமாக 220, 284 ஆகிய எண்கள் போன்றவர்'' என்றுர். 284 ஐ மிச்சமின்றி வகுக்கக் கூடிய எண்கள் 1, 2, 4, 71, 142 என்பனவாகும். இவற்றின் கூட்டுத்தொகை 1+2+4+71+142 = 220 என்பதாகும். இங்ஙனமே 220 இன் வகுத்திகள் 1+2+4+5 + 10 +11+20+22 +44+55 + +110 = 284 என்பதாகும். இதனுலேயே இவை நட்பு எண்கள் எனப்படுகின்றன கணித அறிஞர் பைதகரசும் அவருடைய சீடர்களும் இத்தகைய எண்கள்பற்றி ஆராய்ந்துள்ளனர். இவர்களுக்கு முன்பாக இந்துக்களும் இந்த நட்பு எண்கள் பற்றி அறிந்திருந்தனர். பைபிளில் சில பகுதிகளின்படி ஹீப்ருக்கள் இத்தகைய எண்களை நல்ல சகுனமாகக் கருதியதாக அறியக் கிடக்கிறது. மத்தியகாலத்தில் வாழ்ந்த இளவரசன்ஒருவன் தன்னுடைய பெயர் எழுத்துகளின் கூட்டுத்தொகை 284 ஆக இருந்ததால் தனது மணப்பெண்ணுக வரும் இளவரசியின் பெயர் எழுத்துகளின் எண்தொகை 220 ஆக இருக்க வேண்டும் எனவும் அதனுல் தமது மணவாழ்க்கை மனஒற்றுமையும் மகிழ்ச்சியும் நிறைந்ததாக இருக்குமென நம்பியதாகக் கதையொன்று வழங்கிவந்துள்ளது.

இத்தகைய நட்பு எண்களின் எண்ணிக்கை என்னவென்பது இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. எனினும் கணனி மூலம் கணித்து பல சோடியெண்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சில (1184, 1210), (2620, 2924), [12285, 14595],[17296,18416] என்பனவாகும். இங்கு எண்கள் இரண்டும் இரட்டையெண்ணுக அல்லது ஒற்றையெண்ணுக இருப்பது கவனிக்கத்தக்கது ஒரெண் ஒற்றையெண்ணுகவும், மறு எண் இரட்டையெண்ணுகவும் வரும் சோடி எதுவும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

14 இன் வகுத்திகள் 1,2.7, என்பனவாகும். இவற்றின் கூட்டுத்தொகை 10 எனவே 14 அதன் வகுத்திகளின் கூட்டுத்தொகையைவிடப் பெரியது. இதனுல் 14 மிகை எண் [Excessive number] எனப்பட்டது. இங்ஙனம் பார்ப்பின் 12 இன் வகுத்திகளின் கூட்டுத் தொகை 1+2+3+4+6 = 16 என்பதாகும். எனவே 12 அதன் வகுத்திகளின் கூட்டுத்தொகையைவிடக் குறைவானது. இதனுல் 12 குறையெண் (Defective number) எனப்படுகிறது. ஆனுல் 6 இன் வகுத்திகளின் கூட்டுத்தொகை 1+2+3 = 6 என்பதாகும் அதாவது 6 என்ற எண் அதன் வகுத்திகளின் கூட்டுத் தொகைக்குச் சமனுக உள்ளது. இத்தகைய எண்கள் நிறையெண்கள் [Perfect numbers] எனப்படுகின்றன. 28 இன் வகுத்திகளின் கூட்டுத்தொகை1+2+4+7+14 = 28 என்பதால் அடுத்த நிறையெண் 28 ஆகும். சிறிய நிறையெண்களாகிய 6, 28 என்பன இந்துக்களுக்கும் ஹீப்ருக்களுக்கும் தெரிந்திருந்தது. 6 நிறையெண்ணுக இருப்பதாலேயே உலகம் 6 நாளில் படைக்கப்பட்டதாகப் பைபிளில் கூறப்பட்டிருக்கிறது. சந்திர மாதம் [Lunar month] 28 நாட்கள் கொண்டதாகக் கொள்ளப்படுகிறது.

நிறையெண்கள் சிறப்பானவையென்பதினுல் அவை எண்தொடரில் வெகு அருமையாகவே வருகின்றன 496, 8128, 33550336, 8589869056 என்பன சிலவாகும். பன்னிரண்டாவது நிறையெண் 77 இலக்கங்கள் கொண்டது என்பதினுல் இதுபற்றிய ஆராய்வின் சிரமம் புலப்படும். இதுவரை காணப்பட்ட எல்லா நிறையெண்களும் இரட்டையெண்களே. எனினும் ஒற்றையெண் எதுவும் நிறையெண்ணுக வராதென இதுவரை நிறுவப்படவில்லை. தெரிந்த எல்லா நிறையெண்களும் 6 அல்லது 28 இல் முடியும் இலக்கங்களைக் கொண்டிருப்பதும் கவனிக்கத்தக்கது. 6 ஐத் தவிர்ந்த எல்லா நிறையெண்களின் இலக்கங்களைக் கூட்ட வரும் இறுதி மொத்தம் 1 ஆகும். உதாரணம் 8128 ⟶ 8+1+2+8 = 19 ← -1+ 9 = 10 1-0= 1. 6ஐத்தவிர்ந்த எல்லா நிறையெண்களையும் ஒற்றை யெண்கனங்களின் கூட்டுத்தொகையாகக் காட்டலாம்.

உதாரணம்:

$$28 = 1^3 + 3^3$$

$$496 = 1^3 + 3^3 + 5^3 + 7^3$$

# யாழ்ப்பாணத் தேசவழமை: மாற்றுவது நியாயமா?

வ. மகாலிங்கம்

சமீபத்தில் தேசவழமை பற்றியும் அதன் ஓர் அம்சமாகிய முன்வாங்குரிமைச் சட்டத்தை ஒழித்துக்கட்ட வேண்டும்மென்றும் பாராளுமன்றத்தில் குரல் எழுப்பப்பட்டது. இச்சட்டத்தின் காரணமாக யாழ்ப்பாணத் தமிழர் அல்லாதோர் வடபகுதியில் குடியேறி வாழமுடியாதுள்ளதாகவும், நாடு முழுவதும் இனவேறுபாடின்றி அனைவருக்கும் சொந்தமானது என்ற அரசின் கோட்பாட்டுக்கு முரணானது என்றும் இலங்கையின் இனங்களுக்கிடையிலான சௌஜன்ய வாழ்க்கை முறைக்குக் குந்தகம் விளைவிப்பதாகவும் கூறப்பட்டது.

ஆனால் தேசவழமைச்சட்டத்திலுள் முன்வாங்குரிமைச் சட்டத்துக்கு யாழ்ப்பாணத் தமிழரோ, இந்து மதச்சட்ட விதிகளோ பொறுப்பல்ல. உண்மையில் முன்வாங்குரிமைச்சட்டம் முகமதிய செல்வாக்கின் விளைவாக எழுந்ததாகும். கிறிஸ்து சகாப்தத்தின் ஆரம்ப காலத்தில் இந்தியாவிலும் இலங்கையிலும் அரசியல் ரீதியான செல்வாக்குப் பெற்ற முகமதியர்களே இச்சட்டத்தின் மூலவேராவர். இச்சட்டம் ஒல்லார்து தேசத்தின் சில பகுதிகளிலும், வங்காளம், பீகார், மலபார், பஞ்சாப், அயோத்தி போன்ற பகுதிகளிலும் நடைமுறையில் இருந்துள்ளது. ஒல்லாந்தரே இச்சட்டத்தை உருவாக்கியிருப்பின் அவர்கள் இலங்கை முழுவதற்கும் அதை நடைமுறைப்படுத்தியிருப்பார்கள்.

இச்சட்டத்தின் பிரதான நோக்கம், ஒரு பிரதேசத்தில் வாழும் குடும்பத்தினர், அல்லது ஒரே மதகலாசார வாழ்க்கை முறையைப் பின்பற்றி வாழ்பவர்களின் மத்தியில், அவ்வாழ்க்கை முறைக்கு முரணான அல்லது விரோதமான அந்நியர் குடியேறுவதை தடுப்பதாகும். பண்புள்ள ஒரு சமுதாயம் பரம்பரையாக வாழும் ஒரு பகுதியில், பண்பற்ற கீழ்த்தரமானவர்கள் இடைப்புகுந்து அச்சமுதாயத்தின் அமைதியான வாழ்வைச் குலைப்பதைத் தடுப்பதாய் இச்சட்டத்தின் அன்றையகால அடிப்படை நோக்கம் இருந்தது. பிரபுத்துவ, நிலமான்ய அமைப்பு முறையில் இது மிக அவசியமான சட்டமாகக் கருதப்பட்டது.

முன்வாங்குரிமைச் சட்டத்தின்படி ஒரு சொரியலான காணியில் ஒரு பங்காளி தனது பங்கைக் கூட்டுப் பங்காளன் அல்லாத ஒருவருக்கு விற்பதாக இருந்தால், அதற்கான முன்னறிவித்தலைக் காணி அமைந்துள்ள பகுதியிலுள்ள ஊராட்சி மன்றில் அறிவித்தல் கொடுக்க வேண்டும். [முன்வாங்குரிமைச்சட்டம் பிரிவு 5 (1] அதில் விற்க உத்தேசித்துள்ள விலை குறிப்பிடப்படுவதுடன் குறித்த உள்ளூராட்சிமன்ற விளம்பரப் பலகையில் அவ்வித அறிவித்தல் மூன்று வாரகாலத்துக்கு பொதுமக்கள் பார்வைக்கு ஒட்டப்பட்டிருத்தல் வேண்டும். அக்காலப்பகுதிக்குள் கூட்டுப்பங்காளர் எவராவது அல்லது விற்பவர் மரண சாதனமெதுவுமின்றி இறக்க நேரிட்டால், அவரின் பின்னுரித்தாளராகக் கருதப்படக் கூடியவர் குறித்த விற்பனவுக் கிரயப்பணத்தைச் செலுத்தி அல்வாதனத்தைத் தாங்களே பெறலாம். (பிரிவு 2 [1] [அ] ஆனால் முன்னறிவித்தலின்றி குறித்த ஆதனம் வெளியாருக்கு, அதாவது பங்காளர் அல்லது மேற்குறித்த பின்னுரித்தாளர் அல்லாத ஒருவருக்கு விற்கப்பட்டால் குறித்த அறுதியுறுதி காணிக் கந்தோரில் பதியப்பட்டு ஒரு வருட காலத்துள் சம்பந்தப்பட்டவர் தகுதிவாய்ந்த நீதிமன்றில் வழக்குத்தொடர வேண்டும். குறித்த காலப்பகுதி முடிவடைந்தால் வழக்குத் தாக்கல்செய்ய முடியாது இதனால் யாழ்ப்பாணத் தமிழர் அல்லாதோர் மட்டுமன்றி, யாழ்ப்பாணத்தமிழரும் பாதிக்கப்படுகிறார்கள்.

ஆனால், இது சிங்களவர் வடபகுதியில் குடியேறுவதற்குத் தடைக்கல்லாக இருக்கிறதென்பது, முற்றாக நியாயப்படுத்தமுடியாது. சிங்கள, தமிழ் இனப்பிரச்சினை தோன்றுவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே இச்சட்டம் நடைமுறையில் இருந்து வந்துள்ளது. மேலும் இன்றும் பெருமளவுக்கு நிலப்பிரபுத்துவ முறையையே தழுவிநிற்கும் யாழ்ப்பாணத்தில் இச்சட்டம் நிலவிவருவதில் வியப்பில்லை.

பல்வேறு இனங்களும் மதங்களும் உள்ள இந்நாட்டில், அனைவரும் அரசியல் யாப்பில் மட்டுமன்றி, யதார்த்தத்தில், நடைமுறையில் சுதந்திரமாக எப்பகுதியிலும் குடியேறி சுயமரியாதையுடன் பாதுகாப்புடன் வாழமுடியுமென்ற நிலையை ஏற்படுத்தும்வரை இச்சட்டம் நிலவுவதில் ஆட்சேபனை இருக்கமுடியுமா என்பது சிந்தனைக்குரிய விடயம். இதுவிடயம் பற்றிக் கருத்திற்கொண்டு ஆவன செய்வதாக நீதியமைச்சர் பதிலளித்தமை வரவேற்கக் கூடியதொன்றாகும்.

# பாரதி கண்ட ஹலியின் வால்வெள்ளி

'ஸ்மிருதி'

1882 டிசம்பர் 11-ல் பிறந்த மகாகவி பாரதியார் 1910-11 ''சாதாரண'' ஆண்டில் தோன்றிய ஹலியின் வால்வெள்ளியைத் தமது 28-வது வயதில் கண்டு களித்ததை ''சாதாரண வருஷத்து தூமகேது' எனும் தலைப்பிலான தமது எட்டுக் கவிதைகளில் எமக்குத் தெரியப்படுத்தியுள்ளார். இத்தூமகேது இப்புவிமேல் மீண்டும் மீண்டும் தோன்றுந் தோறும் அற்புத கவி பாரதியை இவ்வுலகோர் மீண்டும் மீண்டும் நினைக்க வைக்க வல்லவையாக இக்கவிதைகளுள்ளன. இத்தூமகேதுவைத் தரிசித்த பாரதியாரில் ஏற்பட்ட மன எழுச்சிகளையும், உணர்வுகளையும் இக்கவிதைகள் அப்படியே எமக்கு படம்பிடித்துக் காட்டுவனவாயுள்ளன.

பாரதி வாழ்ந்த காலத்தில் வால்வெள்ளியின் வரவானது பாமர மக்களை அச்சுறுத்துவதாயும் அவர்களின் பல்வேறு வகைப்பட்ட நம்பிக்கைகளின் தோற்றங்களை வெளிக்காட்டுவதாயும் இருந்துள்ளது. அவர்கள் இதன் வரவை கெடுகாலத்தின் தொடக்கமெனவும், தீமையின் சின்னத்தின் தோற்றமேயென்றும் திடமாக நம்பினார்கள். ஆனால் அற்புத கவிபாரதியோவெனில் தமக்கேயுரித்தான அஞ்சா நெஞ்சுடனும், மிகுந்த ஆர்வத்துடனும், இயற்கையின் இனிய வெளிப்பாடேயென்ற நம்பிக்கையுடனும் எடுத்த எடுப்பிலேயே இத்தூமகேதுவை வரவேற்கும் பாங்கில்... ''தூமகேதுச் சுடரே வாராய்'' எனப்பாடியுள்ளார்.

இவ்வெட்டுக் கவிதைகளில் முதல் இரண்டு கவிதைகளும் தூமகேதுவின் வடிவத்தைக் குறிப்பனவாக அமைக்கப்பட்டுள்ளன. இவ்வால் வெள்ளியின் வடிவை தோற்றத்தை வருணிக்கும்போது; ஒருசிறு தினையின்மேல் பனைமரம் ஒன்று நின்றால் எப்படியிருக்குமோ, அதைப்போன்று ஒரு மணிச்சிறு மீனின்மீது நெடிது நீண்டு வளர்ந்த ஒளிபொருந்திய வால் கொண்டது என்கின்றார். அத்துடன் இவ்வாலானது எண்ணிலா பலகோடி யோசனையெல்லை நீண்டதும், சொல்லற்கரிய பலவகைப்பட்ட மென்மையான வாயுக்களால் ஆக்கப்பட்டதுமாகும் என்று வியந்து வியந்து கூறுகின்றார். பலவகையான வாயுக்களினதும், தூசிப்படலங்களினதும், நீராவியினதும் சேர்க்கையே வால்வெள்ளியின் வாலாக நீண்டு தோற்றமளிக்கின்றது என்பதை விஞ்ஞானிகள் ஆராய்ந்து உணர்ந்தது போலவே பாரதியும் இப்புதுமைச் செய்தியைத் தமது கவிதைகளில் சொல்லியிருப்பதானது விஞ்ஞானிகளின் கூற்றைத் தானும் ஏற்றுக்கொள்வதை எம்மால் உணரமுடிகின்றது. இதனையே அவர் ''எண்ணிலா பலகோடி யோசனையெல்லை; எண்ணிலா மென்மை இயன்றதோர் வாயுவால் புனைந்த நின்னொடு வால்'' என்றார்.

அடுத்த இரண்டு கவிதைகளில் இவ்வால்வெள்ளி பற்றிய புதுமைச் செய்திகளையும், அவற்றை மேல் நாட்டாரே ஆராய்ந்து அறிய முற்படுகின்றனர். நம்மனோர் இதுபற்றி அறியாதுள்ளனர் என்கின்ற செய்திகளையும்; பாமரமக்களின் அறியாமைபற்றியும் வெளிப்படுத்தியுள்ளார். ஹலீஸ் வால் நட்சத்திரத்தின் வாலானது எண்ணற்ற பலகோடி யோசனையெல்லை நீண்டதாய்; அது சூரியக்குடும்பத்தை அண்மித்து, அதனை வளையவரும்போது அவ்வாலானது சிலபோது சூரியக் குடும்பக் கோள்கள் சிலவற்றை ஊடறுத்துச் செல்லும். பூமியை இதன் வால் தழுவிச் செல்வதை பலதடவைகள் மக்கள் கண்டுள்ளதையும்; அறிஞர் இதுபற்றி எடுத்துக் காட்டியுள்ளதையும்; அதேசமயம் இப்படிச் செல்லும்போது பலதீமைகள் உண்டாகும் எனப் பாமரர் எண்ணித் துயருற்றதையும் கண்டு, கேட்ட பாரதியார் அதனிடமே சொல்வதுபோல் ''மண்ணகத்தினையும் வால்கொடு தீண்டி; ஏழையர்க்கேதும் இடர் செயாதே நீ போதி...'' என்று சொல்வதில் இருந்து ஏழைமக்களிடம் அவருக்கிருந்த அநுதாபமும், அவர்கள் இடர்படாது வாழவேண்டும் என்பதிலிருந்த ஆர்வமும் எமக்குப் புலனாகின்றன.

எப்போதும் தமிழர் தம் வாழ்வு, பண்பாடு, மொழி என்பவற்றைப் பேணிக்காக்க வேண்டும், வளமுறச் செய்ய வேண்டும் என்பதில் பெருவிருப்புக் கொண்டபாரதியார்: நம்மக்கள் இத்தூமகேதுவைப் பற்றி ஆராய்ந்து உண்மைகளை அறியாது, பாமரத்தனமான எண்ணங்களிலும் நம்பிக்கைகளில் மட்டுமே மூழ்கிக்கிடப்பதையும் கண்டு தாங்கொணா வேதனையடைந்தார். ஆனால் ஹலீஸ் போன்ற மேல்நாட்டினர் விஞ்ஞான பூர்வமான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு பல உண்மைகளை வெளிப்படுத்தியிருந்ததையும் கண்ணுற்றார் எமது மக்களோ இனப்பெருமை, பண்பாட்டுப் பெருமை, மொழியின் அருமை பெருமை என்பவற்றை மறந்து அறிவிலிகளாய் இருப்பது கண்டு மனம் வெதும்பிய பாரதியார் அதைத் தூமகேதுவிடமே சொல்லி வருந்தி முறையிடுவதுபோல் பின்வருமாறு தம்கவிதையில் பாடியுள்ளார். . . ''புதுமைகள் ஆயிரம் நினைக்குறித்தறிஞர்கள் நிகழ்த்துகின்றனர்'' என்றும்;

''பாரதநாட்டில் பரவிய எம்மனோர்
நூற்கணம் மறந்து பன்னூறாண்டாயின
உனதியல் அன்னியர் உரைத்திடக்கேட்டே
தெரிந்தனம்; எம்முளே தெரிந்தவர் ஈங்கில்லை''

என்றும் குறிப்பிட்டுள்ளார்.

புகழ்மிக்கசமுதாயமாக ஓர் காலத்தில் வாழ்ந்தஎம்மனோர் தமது பண்டைய பெருமை எல்லால் மறந்துவிட்டார்கள். அறியவேண்டியவற்றைப்பற்றியெல்லாம் வேற்றவர் சொல்லியே தெரிந்து கொள்ள வேண்டியுள்ளதே என மனம் வருந்திய பாரதியார் தமக்குச் சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் இனத்தின் விழிப்புணர்ச்சியைத் தூண்டும் விதத்திலெல்லாம் பின்வருமாறு பல பாடல்களைப் பாடியுள்ளார்.

......சென்றிடுவீர் எட்டுத் திக்கும்
கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்
என்றும்;

(8-ம் பக்கம் பார்க்க)

## மகளிர் இராணுவம்!

உலகிலேயே பெண்களின் இராணுவப் பயிற்சிக் கல்லூரி லிபியாவில்தானுள்ளது. பட்டப்படிப்பு முடித்த 200 மாணவிகள் இங்கு தமது பயிற்சியை மேற்கொள்கிறார்கள். நவீன யுத்த தளபாட வசதி கொண்ட பெரிய நாடு. 80,000க்கு அதிகமான இராணுவ வீரர்களைக் கொண்டுள்ளது.

— ஸச்சி.

# பண்டிதமணி ஐயா: சில நினைவுகள்

ஒரு வெள்ளிக்கிழமை நல்லூர்க் கந்தன் தரிசனத்துக்குப் போய்க் கொண்டிருந்த போது கத்தோலிக்க நண்பர் ஒருவர் துண்டுப்பிரசுரம் ஒன்றைத்தந்தார். துண்டுப்பிரசுரத்தை வாங்கிப்படித்தேன். அவ்வளவு பெரிய விடயமல்ல, பட்டினத்தார் பாடலில் ''நீற்றைப் புனைந்தென்ன நீராடப்போயென்ன மாறிப் பிறக்கவகையறிந்தேனில்லை'' என்ற வரியைக் குறிப்பிட்டுத் திருநீற்றின் மகிமையைக் கண்டித்தது போல்காணப்பட்டது உடனே நாவலர் வழிநிற்கும் பண்டிதர் ஐயாவின் எண்ணம் வந்தது. அன்றுதொடக்கம் இன்றுவரை பண்டிதர் ஐயாவின் பேச்சு எழுத்துக்களை கண்டால், காணாவிட்டால் தேடியும் பார்க்கும் பாக்கியம் பெற்றேன்.

யாழ். முற்றவெளியில் தந்தை செல்வாவின் ஞாபகத்தூபி திறப்பு விழா அன்று நானும் போயிருந்தேன். தமிழ்மலை தனிநாயகம் அடிகளார் தலைமையுரையில் முதல் வார்த்தையாக இந்த இடம்பண்டிதமணிஐயாவுக்கே உரியது என்றார். அடிகளார் ஐயாமீது மாபெரும் மதிப்பு வைத்துள்ளார் என்பதை உணர்ந்து ஆனந்தப்பரவசமடைந்தேன். இப்படி ஐயாவின் புகழை வண்ணைவைத்தீஸ்வரவித்தியாலயத்தில் பண்டிதமணி கதிரேசன் செட்டியாரோ யாரோ ஒரு பெரியார் ''இளம் தமிழ்மணி ஒன்று உருவாகிறது''எனக் கூறியதை நேரே இருந்து கேட்டேன் எனக்கும் பண்டிதமணி ஐயாவுக்கும் அறிவுப்பிணைப்போ குருசிஷ்யபிணைப்போ இன்றித் தெய்வப்பிணைப்பு ஏற்பட்டது எனலாம். நான் துண்டுப்பிரசுரத்தை வைத்து கடிதம் ஒன்று எழுதி 29ந் திகதி அனுப்பினேன். பதில் மூன்றுநாளால் அதாவது அடுத்தமாதம் 1ம் தேதி கிடைத்தது. பட்டினத்தார் பாடலில்.

''ஊரில் உமக்கோர் உபதேசம் நீற்றை
உடம்பெல்லாம் போர்த்திக் கொள்வீர்''

என்ற வரியையும் எழுதித் தேவையான எந்த நேரமும் வந்து சந்திக்கலாம் எனவும் குறிப்பிட்டிருந்தார். இது அவன் பிணைப்பேதான். அடிக்கடி போவேன். ஏழைப்பரதேசியாகியயான் ஏதாவது அன்புக் காணிக்கையாகக் கொண்டுபோக எண்ணுவேன். பயம் விடாது. எனக்கு அன்பளிப்பாகப் புத்தகம் அதில் ஆசி எழுதித்தருவார். கந்தபுராணவிழா, கந்தபுராணபடனம் ஆகியனவற்றிற்கு ஆசி வேண்டி நிற்பேன். எழுதித்தருவார். பத்திரிகைகளிலும் விமர்சிப்பார். கந்தபுராணபடனம் தெய்வத்தோடு பிணைக்கும் எனக் கூறுவார். கடிதம் போட்டால் என் தெய்வம் உடனே பதில் போடுவார். அவருடைய அணைப்பால் திருவருள் பாதைக்கு உந்தப்பெற்றேன்.

— ப. குட்டித்தம்பி

# தொடர் நவீனம்

# இருள் இரவில் அல்ல

★ இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்

கந்த மூர்த்தியின் செத்த வீட்டில் சனம் கூட்டமாக இருந்தது. பறை மேளத்தின் ஓசையும் முன்பை விட உக்கிரமாக கேட்க ஆரம்பித்தது.

பொன்னுத்துரை மாஸ்டர் அவசரமாக கருமங்களை பார்த்துக் கொண்டிருந்தார். குருக்கள் வந்து இறுதிக்கிரியைகளுக்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார். கூடியிருந்த ஆண்களும், பெண்களும் முன்போலவே தங்களது வீண் வாதங்களில் ஈடுபட்டிருந்தார்கள்.

''இவ்வளவு காலம் இல்லாமல் இப்ப கிட்டடியில்தானே பெட்டையின்ரை கழுத்தில் கொடி கட்டினவன் அதுதான் சரிவரவில்லை''.

''ஒரு வேளை தாலிப்பொருத்தம் இல்லையோ?...''

''அப்பிடியும் இருக்கும் தாலிகட்டினதுதான் தாமதம் புருஷனை விழுங்கிப்போட்டாளே.''

''பொம்பிளையழுக்கும் கொடுத்து வைக்க வேணும். அதுவும் தாலிப்பொருத்தம் கட்டாயம் வேணும்.''

''அப்ப அவன் உவளைக் கூட்டிக்கொண்டு ஓடிவரேக்க உதுகளையெல்லாம் பார்த்துக் கொண்டே வந்தவன்.''

''அப்பிடிப்பொருத்தம் பார்க்காமல் வந்ததன்பலனைத் தான் பார்த்தியே. கடைசியில இப்ப அவளைப் பார்த்தியே, தாலியறுந்து போய் நிற்கிறாள்.''

பெண்களில் சிலர் சுவாரஸ்யமாகக் கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

''அவன் பெடியன் சரியான பிரயாசை.''

''அதால என்ன நடந்தது, இப்ப கடைசியிலை மண்டையைப் போட்டதுதான் மிச்சம்.''

''தான் உழைச்சுப் பெண் சாதிக்குக் கொடிகட்ட வேணும். என்று சரியாய்க்கஸ்டப்பட்டு உழைச்சவனும்.''

''ஏன் உந்த உபத்திரவமெல்லாம். அந்தநேரத்தில் முறையாய்ப் பேசிக் கலியாணம் செய்திருக்கலாம். நல்ல சொத்துக்களோடை காசுமாகச் சீதனம் வேண்டிக் கலியாணம் செய்திருந்தால் உப்பிடி நடக்குமோ. இல்லை கேட்கிறன் உவன் பெடியனைப் போல முட்டாள் வேறையார். இருக்கினம்.''

''அது உண்மைதான் ஏதும் பரம்பரையாக சொத்து இருக்கவேணும். இல்லாவிட்டால் நல்ல சொத்துப்பத்து இருக்கிற இடத்தில் கலியாணம் செய்ய வேணும். இப்படி இரண்டு வழியும் இல்லாட்டி உந்தப் பெடியன் மாதிரிதான் சிக்கலில் ஆப்பிடவேண்டும்.'' ''பொம்பிளையை ஆசைப்பட்டு தூக்கிக் கொண்டு வந்தவருக்கு இப்பிடி கஸ்டப்பட்டு உழைச்சு தாலிக் கொடிகட்டவேணும் என்று என்ன வில்லங்கமே. இல்லை பேசாமல் இருந்த மாதிரி இருந்திருக்கலாமே. மனிசிக்கு தாலிக்கொடிகட்ட ஆசைப்பட்டு கடைசியாய் கட்டின தாலியை அறுக்க வைச்சிட்டான்''

ஆண்களில் சிலர் வேப்பமரத்தின் கீழ் நின்று பேசிக்கொண்டிருந்தனர். வேப்பமரத்துக்கு அப்பால் நின்றவாறுமுன் போல சுருட்டு புகைத்துக் கொண்டிருந்தார் பொன்னம்பலம். ஆண்களின் மேற்குறிப்பிட்ட உரையாடல்களை அவர் செவிமடுத்தாலும் பதிலேதும் பேசாமல் மௌனமாகவே நின்று கொண்டிருந்தார்.

கந்தமூர்த்தியின் மகன் அரையில் கட்டிய சிறு வேட்டியுடன் என்ன நடக்கிறது என்று தெரியாமல் பேந்தப் பேந்த விழித்தவாறு பந்தலில் குழுக்களுக்கு அருகாமையில் நின்று கொண்டிருந்தான்.

பொன்னுத்துரை மாஸ்டரின் மனைவி பகவதியின் பிடிக்குள் அகப்பட்டு அரைகுறை நினைவோடு ஈனக்குரலில் அழுது கொண்டிருந்தாள் வசந்தமலர்.

இறுதிக்கிரியைகள் எல்லாம் முடிந்து பிரேதப் பெட்டியை மூடினார்கள். வழக்கமான செத்த வீடுகளில் பிரேதப் பெட்டியின் மூடியை மூடுவது ஒரு பெரிய சோதனையான விடயமாக அமைந்து விடும். உண்மையாகவோ அல்லது போலியாகவோ தெரியாது. இனிமேலும் பார்க்க முடியாத இறந்தவரின் முகத்தை கடைசித் தடவையாக பார்ப்பதற்கு எல்லோரும் அமளிப்பட்டவாறு பிரேதப் பெட்டியின் மூடியை மூடவிடாது தடுப்பார்கள்.

ஆனல் இங்கு அப்படியான ஓர் சோதனை கட்டம் ஏற்படவில்லை. பூரணமான துயரத்தில் மூழ்கி அழுதுகொண்டிருந்த வசந்தமலர் அந்த சந்தர்ப்பத்தில் புயலாக அழுது கொண்டு. ''என்ரை தெய்வமே'' என்று எழுந்தாலும் அவளை சுலபமாக சமாளித்து விட்டார்கள்.''

பிரேதப் பெட்டி மூடிய கையோடு சிலர் பெட்டியை தூக்கினார்கள்.

தகப்பனுக்கு கொள்ளி வைக்கப் போகின்ற சங்கரனை கண்ட வசந்தமலர் தன்னைப் பிடித்திருந்தவர்களை உதறித் தள்ளி விட்டு சங்கரனை வாரியணைத்தாள். ''ஐயோ என்ரை ராசாவே உன்னை இந்த வயதில கொள்ளி வைக்க செய்து விட்டு அவர் போய் விட்டாரே. ஐயோ கடவுளே இனி நான் என்ன செய்ய ஐயோ என்ரை தெய்வமே என்னை தவிக்க விட்டுவிட்டு போய் விட்டீர்களே. இனி எனக்கு யார்துணை'' என்று வசந்தமலர் மகனைக்கட்டிப் பிடித்துக் கொண்டு அழுதாள். புலம்பினாள்.

சங்கரனுக்கு ஒன்றும் புரியவில்லை தாய் அழுவதைப் பார்த்து அவனும் அழுதான். பொன்னுத்துரை மாஸ்டர் சங்கரனைப்பிடிக்க அவர் மனைவி பகவதி வசந்தமலரை பிடித்துக் கொண்டாள்.

பறை மேளம் முழங்க கந்த மூர்த்தியின் பிரேத ஊர்வலம் அந்த இடத்தை விட்டு நகர ஆரம்பித்தது. வசந்தமலர் ஓ வென அலறியவாறு மயங்கி வீழ்ந்தாள்.

★

யாரோ ''அப்பு அப்பு'' என அழைப்பது கந்தையரின் காதில் வீழ்ந்தது. மெல்ல விழிகளை திறந்தார். சுருட்டுக் கொட்டிலில் சுருட்டிக் கொண்டிருந்ததங்கராசு அவர் அருகில் நின்று கொண்டிருந்தான். ''என்ன அப்பு என்ன நடந்தது.'' என அவன் கேட்டான். ''தம்பி கொஞ்சம் தண்ணி கொண்டா மோனை'' என்றார் கந்தையர்.

தங்கராசு சுருட்டுக் கொட்டிலுக்கு பக்கத்தில் இருந்த வேலிப் பொட்டுக்கால் நுழைந்து தங்கள் வீட்டுக்குள் ஓடினான். அவன் திரும்பி வரும் போது தேத்தண்ணி கொண்டு வந்தான்.

கந்தையரை அவன் வெகு ஆறுதலாக தேத்தண்ணியை குடிக்கச் செய்தான். தேத்தண்ணி குடித்த பின்னர் கந்தையருக்கு கொஞ்சம் தென்பு ஏற்பட்டது. நன்றியுடன் தங்கராசுவைப் பார்த்தார்.

சாய்மனைக் கதிரையில் படுத்திருந்த கந்தையர் இருமியவாறு தடுமாறிக் கொண்டிருப்பதை சுருட்டுக் கொட்டிலில் இருந்த பலர் பார்த்துக் கொண்டிருந்தனர். கந்தையருக்கு அந்த வீட்டில் நடக்கும் நடப்புகள் பொதுவாக தெரியும். புவனசுந்தரிக்கு மரியாதை செய்வதுபோல அவர்கள் பேசாமல் இருந்தாலும் தங்கராசுவால் அப்படி இருக்க முடியவில்லை.

## 4

தேத்தண்ணி குடித்ததனல் உண்டான தென்புடன் கந்தையர் எழும்பி மெல்ல நடந்து சுருட்டுக் கொட்டிலுக்கு வந்தார்.

சுருட்டுக்கொட்டில் திண்ணையில் வசதியாக அமர்ந்து கொண்டு தங்கராசுவிடம் பேச்சுக் கொடுத்தார்.

''என்னடா தம்பி யார் செத்தது பறை மேளம் கேட்குது'' ''அதுவோ அப்பு அதில மங்களாம்பிகை மாமியின்ரை காணியில் குடியிருந்தார் கந்தமூர்த்தி என்று, அவர் தான் இராத்திரி செத்துப் போனர், நெஞ்சுவலி என்று படுத்தவர்தான் அப்படியே செத்துப் போனராம்'' என்று தங்கராசு சொன்னர்.

''அவ்வளவு வயதில்லையே......'' என்றார் கந்தையர் ''ஓம் அப்பு மிஞ்சிப் போனலும் முப்பத்தி மூன்று வயதிருக்கும்''. ''அவன்ரை பெண் சாதிக்கு என்ன வயதிருக்கும்'' என கந்தையர் மீண்டும் கேட்டார்.

''மனிசிக்கும் இருபத்தியாறு அல்லது இருபத்தியேழு வயதிருக்கும். ஐந்து வயதில் ஒரு பெடியனும் இருக்கு.'' ''ஐயோ பாவம்'' என்று மன வருத்தப்பட்டார் கந்தையர். ''பெட்டைக்கு இன சனத்தின்ரை உதவியில்லை என்ன தங்கராசு'' ''ஓம் அப்பு இரண்டு பேரும் தங்கடை வீட்டுக்காரரை பகைத்துக் கொண்டுதான் கலியாணம் செய்தவர்களாக்கும். அதால ஒருத்தரும் ஒற்றுமை இல்லை. செத்தவீட்டுக்கு கூட ஒருத்தரும் வரவில்லை என்று கதைத்தினம்.''

''அப்பிடியோ அதுகள் தான் உண்மையான இனசனமும் சகோதரர்களும் - சீச்சி உப்பிடியும் இருக்கிறதோ என்ன மனிசரப்பா'' என கந்தையர் சலித்துக் கொண்டார்.

மனைவியில்லாமல் தான் படும் துன்பங்கள் அவருக்கு தெரியும். வயது போனலும் தான் ஒரு ஆண் என்றல் கூட சுதந்திரமாக வாழமுடியவில்லை இத்தனைக்கும் எனக்கு உற்றர், சுற்றத்தார், மகன், மகள், மருமகள், மருமகன் இன்னும் பேரப்பிள்ளைகள் என பலபேர் இருக்கின்றர்கள். அப்படி இருந்தும் நிம்மதியாக வாழமுடியவில்லை.

அந்தப் பெட்டை எப்படி வாழப் போகின்றள். அதுவும் இள வயதுக்காரி யாருடைய ஆறுதலும் இல்லை; வருமான வழியும் இல்லை; கந்தையர் கடுமையாக யோசித்தார்.

எந்தவொரு ஆணும் வயதான காலத்தில் மனைவியை இழக்கக்கூடாது. அதேபோல எந்தவொரு பெண்ணும் இள வயதில் கணவனை இழக்கக் கூடாது என்பதில் ஒரு பகுதியை தன்னுடைய வாழ்க்கையில் கந்தையர் உணர்ந்து கொண்டார். ஆனல் அதன் அடுத்த பகுதியாகிய எந்தப் பெண்ணும் இளவயதில் கணவனை இழக்கக் கூடாது என்பதன் உண்மையை வசந்தமலரின் வாழ்க்கையில் உணர வேண்டி வந்துதுள்ளதே எனவும் கந்தையர் நினைத்தார். தமது சமுதாயத்தின் ஏற்றத் தாழ்வுகளும் குளறுபடிகளும் ஒருவரது வாழ்க்கையில் இன்னொருவருடைய குறுக்கீடுகள், வீண்கதைகள், பொய்யான குற்றச்சாட்டுகள் கள்ள உறவுகள், கேலி செய்யும் போக்கு போன்ற பலதரப்பட்ட பிரச்னைகள் மத்தியிலே இவைகளை எதிர்த்து வசந்தமலர் எப்படி வாழப் போகின்றள் என்பதுதான் கந்தையருக்கு அதிக யோசனையைக் கொடுத்தன.

★

கந்தையருக்கு இருந்த யோசனையைப் போலத்தான். அவர் மகன் பொன்னம்பலத்துக்கும் ஏற்பட்டது. கந்த மூர்த்தியின் பிரேத ஊர்வலம் புறப்பட்டுப் போன பிறகு வசந்தமலரின் வீட்டின் திண்ணையில் சிறிது நேரம் அமர்ந்திருந்தார்.

பிரேத ஊர்வலம் புறப்பட்டுப் போன பிறகு மயங்கி வீழ்ந்த வசந்தமலரின் மயக்கத்தை தெளிவிக்க பொன்னுத்துரை மாஸ்டரின் பெண்சாதி பகவதி ஈடுபட்டிருந்தாள் மயக்கத்தில் இருந்த வசந்தமலரை பார்க்க பார்க்க பொன்னம்பலத்திற்கு ஏற்பட்டிருந்த யோசனை பன்மடங்காகியது. அந்த யோசனையில் அவர் மூழ்கிக்கொண்டிருக்கும் போது அவரின்மனைவி புவனசுந்தரி அங்கு வந்தாள்.

''என்ன யோசனை..'' என அவள் கேட்டாள்.

''ஒன்றுமில்லை'' என்று சொல்லிக் கொண்டாலும் அந்த நேரத்தில் மனைவியைப் பார்க்க சங்கடமாக இருந்தது அதன் காரணம் அவருக்கு புரியவில்லை.

''அப்ப இஞ்சை ஒருக்கா வாருங்கோ ஒரு அலுவல் கதைக்கவேணும்''

''சரி வாறன்'' என்றுசொல்லிக்கொண்டு பொன்னம்பலம் எழுந்து மனைவியின் பின்னல் நடந்தார்.

''உங்களுக்கு கொஞ்சம் தன்னும் மூளையிருக்கே'' என்று புவனசுந்தரி கேட்டாள்.

''என்ன'' என பொன்னம்பலம் திகைப்புடன்கேட்டார்.

''என்னேடை கொஞ்சம் கூட கதைக்காமல் என்னதுணிவில செத்தவீட்டு செலவுக்கு காசு கொடுப்பீங்கள்''

பொன்னம்பலத்தின் திகைப்பு மேலும் அதிகமாகியது. தான் செத்தவீட்டு செலவுச்கு காசு கொடுத்தது இவளுக்கு எப்படித் தெரிந்தது என்று யோசனை செய்து கொண்டே மனைவியைப் பார்த்தார்.

''ஓ அதுவே விசியம்'' என்றார்.

''உங்களுக்கு என்ன இப்ப மூளை குறுக்காலேயே போட்டுது. வெகு சுலபமாக ஓ அதுவே விசியம் என்கிறீர்கள்''

''இப்ப என்ன நடந்து போச்சுது''

''என்ன இனி நடக்க வேணும். சரிகொடுத்துத்தான் விட்டியள் இனி எப்படி அதை அறவாக்கப் போறியள்''

''அதை இப்ப யோசிக்கிறதே. ஆறுதலாக அதைப் பற்றி யோசிப்பம்''

''அட கடவுளே உங்களுக்கு என்ன நடந்தது; கொஞ்ச காசே அதைத்தூக்கிக்கொடுத்துப்போட்டு எப்பிடி அறவாக்கிறது என்பதைப்பற்றி ஆறுதலாய் யோசிப்பம் என்று எண்ணுறியளே. காசு என்ன மரத்திலேயே காய்க்கிறது''

''அவள் பாவம். புருஷன் செத்துப்போன நேரத்திலை''

''நல்ல பாவம் பாக்கிறியள். அவளும் பொம்பிளையே. முழுவியளத்துக்கு உதவாதவள். நல்ல பொம்பிளை ராசியானவள் என்றல் உப்பிடிபுருஷனை பறிகொடுத்திருப்பளே'' என புவனசுந்தரி திட்டினள்.

பொன்னம்பலத்தின் மனத்தில் சிறு உளைவு ஏற்பட்டது, தனது மனைவியின் திட்டுதல்களை பூரணமாக அவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இருந்தாலும்.

''இப்ப என்ன செய்யச் சொல்கிறய்''

''அவளிட்டை காசு அறவாக்க ஒரு சுலபமான வழி இருக்கு''

''என்ன'' என்று கேட்டார் பொன்னம்பலம்.

புவனசுந்தரிபொன்னம்பலத்தின் காதில் மெதுவாக எதையோ குசுகுசுத்தாள். பொன்னம்பலத்தின் முகத்தில் மாற்றம் ஏற்பட்டது.

''அது அவ்வளவு சரியில்லை''

(8-ம் பக்கம் பார்க்க)

## உண்மையான கைவிளக்கு எது?

நள்ளிரவில் நெடுந்தூரம் நடந்து செல்ல வேண்டும். சேர வேண்டிய இடம் கண்ணுக்குத் தெரியவில்லை. கைவிளக்கு ஒன்று கைவசம் உண்டு. அது சில அடி தூரந்தான் வெளிச்சம் காட்டுகிறது. ஆயினும் அது போதுமானது. நாம் போகப் போக வெளிச்சமும் கூடவே வரும். அப்போதைக்கப்போது நாம் செய்ய வேண்டிய கடமையைச் சரிவரச் செய்தால், அது நல்ல முடிவுக்கு நம்மைக் கொண்டு சேர்க்கும். மனசாட்சிதான் நம்மிடையே உள்ளகைவிளக்கு. நேர்மையான வாழ்க்கையில் அது நம்மை நடத்திச் செல்லும்.

சுவாமி சித்பவானந்தரின்,
''தினசரி தியானம்''

## சிரித்திரனில்...

கேள்வி: நாம் நல்லதிற்கு மதிப்புக் கொடுப்பதில்லையே?

பதில்: ஓம்.. பால்காரனை வீடு வரச் செய்கிறோம். சாராயம் விற்பவனைத் தேடிப்போகிறோம்.

கேள்வி: ஜனநாயகம் எப்படி இருக்க வேண்டும்?

பதில்: தாயின் மடிபோன்றிருக்க வேண்டும், தாயின் மடியில் பிள்ளைகளுக்கு உயர்வு தாழ்வு இல்லையே!

...மகுடியார்

# ஹலியின் வால்வெள்ளி

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

புத்தம் புதிய கலைகள் -பஞ்ச
பூதச் செயல்களின்
நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே
- அந்த
மேன்மைக் கலைகள்
தமிழினில் இல்லை''
என்றும் பாடியுள்ளார்.

அடுத்த நான்கு பாடல்களும் இத்தூமகேது மக்களிடையே இருந்த பல்வேறு வகைப்பட்ட நம்பிக்கைகளை பற்றியும் விஞ்ஞான விற்பனர்களின் கருதுகோள்கள் பற்றிய செய்திகளையும், அப்படியான நம்பிக்கைகளும் செய்திகளும், உண்மையானவையா? அல்லது பொய்யானவையா? என்று அறியும் ஆவலில் அத்தூமகேதுவிடமே இவற்றையெல்லாம் நேரில் கேட்டுத் தனது ஐயங்களை நீக்கிக்கொள்ளலாம் என்பது போலும் பாடியுள்ளார், ''வாராய் சுடரே; வார்த்தை சில கேட்பேன்...'' என்று தூமகேதுவை மிக வாஞ்சையுடன் வரவேற்பது போலும்' தனக்கு மிக நெருக்கமான ஒருவரிடம் பல விடயங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்வதுபோலும் பாடியுள்ளது, பாரதியின் கவியுள்ளத்தைக் கொண்டு நாமே நேரில் கேட்பது போலுள்ளது.

தீயவர்களை ஒறுத்து அவர்களைத் தண்டிப்பதுடன், தொல்புவியையும் மீளாத் துயரிலாழ்த்திச் செல்லவுமே நீ வருகின்றாய் என்கின்றனர். தீயவர்களை தண்டிப்பது முறையே ஆனால் புவியிலுள்ளோரனைவரையும் தண்டிப்பது தகுமா? இது மெய்யோ? அல்லது பொய்யோ? என சொல்லாயோ என்கின்றார். தீயவர்கள் தண்டனை பெறும்போது நல்லோரும் பாதிப்படைவது எங்ஙனம் நீதியாகும் என்பதுவே பாரதியின் நிலைப்பாடகும்.

ஆதி பராசக்தியின் ஆணையைச் சிரமேல் ஏற்று, அதைத் தண்டமாய் எண்ணி; இப்புவியினைப் புனிதப் படுத்தவே நீ வருகின்றாய் என்கின்றனர். உன்வருகையால் நிலவுலகு புனிதமடையுமாயின் அது பராசக்தியின் ஆணையன்றி வேறாய்இருக்க முடியாதே? இது உண்மையா? அன்றிப் பொய்யான எண்ணமா? என்பதை எனக்குச் சொல்வாய் என்கின்றார்.

1682 ல் வானியலாளரான ஹலியால் இத் தூமகேது அவதானிக்கப்பட்டதோடு. இதன் வரவுகள் இதற்கு முன்பும் பலதடவைகள் நிகழ்ந்திருப்பதை அவர் அவதானித்துப் பலப்பலகணிப்புகளை மேற்கொண்ட பின், இத் தூமகேது 1758 ல் மீண்டும் வரும் என்றும்; ஒவ்வொரு எழுபத்தைந்து வருடத்துக்கொருதடவை இது தோன்றுமென்று அவர் அறுதியிட்டுக் கூறியிருந்தார் ஆனால் தனது கூற்றுச்சரியானதுதான் என்பதை அறியாமலேயே அவர் 174- ல் காலமானார். இத் தூமகேது 1910—11ல் வந்த போது பாரதியாருக்கு நல்ல வாலிபப்பருவம் 28 வயதான கவிபாடும் இனிய இளம் உள்ளம். ஹலியின் கூற்று உண்மையானதுதானா என அறியும் ஆர்வத்தை அவர் கொண்டிருந்தமையால், வெள்ளி அவ்வாண்டில் தெரிந்தும் அவர் அதனிடமே கேட்டுத் தனது ஐயப்பாட்டைப் போக்குவது போலும்; ''எழுபத்தைந்து வருடத்துக் கொருதடவை நீ வரும் வழக்கினைக் கொண்டிருப்பினும் இம்முறை உனது வரவால் இங்கு புதுமைகள் பல உண்டாகுமென்று எம்மனோர் மிக்க ஆர்வமாயுள்ளனரே? இக்காரணம் உண்மையானது? அல்லது அவர்களை ஏமாற்ற மடையச் செய்யவுள்ள பொய்யான சேதியா? புதுமைகள் விளைந்து புவியிலுள்ளோர் இன்பமுடன் வாழ்ந்தால் எவ்வளவு இனிமையாயிருக்கும் என்றும் செய்தி அவ் இளம் கவியின் உள்ளத்தில் பிரவாகமாகப் பொங்குவது அவர் கவிதையில் வெளிப்படுகின்றது. இதையே அவர்;

''ஆண்டோர் எழுபத்தைந்
தினில் ஒருமுறை
மண்ணை நீ அணுகும்
வழக்கினையாயினும்
இம்முறை வரவினால்
எண்ணிலாப் புதுமைகள்
விளையுமென்கின்றார்;
மெய்யோ, பொய்யோ!''

எனப் பாடியுள்ளதாவது புதுமைச் செய்திகளையெல்லாம் அவர் தனது இனிய கவிதைகளில் வெளிக்காட்டத் தவறியதே இல்லை என்பது தெளிவாகிறது.

இத்தூமகேதுவின் வரவால் இவ்வுலகில் நற்காரியங்கள் பல உண்டாகுமென்றும் இழந்துபோன சிறந்த அறிவும் தெளிவும், கௌரவமும் நம்மக்களிடையே மீண்டும் விளையுமென்றும் இயம்புகின்றனரே. இது உண்மைதானே என்று அதனிடமே தமது கடைசிக் கவிதை மூலம் கேட்கின்றார். உனது வரவின் பின்பாவது பாரதநாடு அடிமை விலங்கொடித்து அந்நியராதிக்கத்தில் இருந்து மீண்டு மக்கள் சுதந்திர புருஷராய் வாழும் அற்புதம் உன்வரவாலாவது ஏற்படாதா'' என்ற பாரதியின் வாஞ்சை இத்தூமகேது தோன்றி முப்பத்தேழு வருடங்களின் பின் பாரதம் சுதந்திரம் பெற்றதால்நிறைவு பெற்றது. பாரத தேசத்தின் சுதந்திரத்தையே இத்தூமகேதுவாலுண்டாகப் போகும் சித்திகள் பலவற்றுள் மிக மிக்கியமான தொன்றாய் பாரதி கருதியிருந்திருப்பாரென்பதில் ஐயமில்லை.

மகாகவி பாரதி வாழ்ந்த போது வந்த தூமகேதுவுக்கும் அதன்பின் இப்போது வருகின்ற அதே தூமகேதுவின்வரவுக்கும் இடைப்பட்ட ஒரு ''தூமகேதுக்கால'' இடைவெளியில், பாரதத்திலும் மற்றும் எங்கிலும் ஏற்பட்ட பாரிய சமுதாய மாற்றங்களை நாம் மீண்டும் அவதானிப்போமாயின் தீர்க்கதரிசனம் கொண்ட அற்புத கவி பாரதியின் எண்ணங்கள் அபிலாசைகள், தீர்க்கதரிசனங்கள் எல்லாம் எவ்வளவு தூரம் ஈடேறியுள்ளன என்பதை நாம் கண் கூடாகக் காணக் கூடியதாயுள்ளது.

எப்போதும் இயற்கையையும், சூரிய, சந்திரர்களையும் தமது கவிதைகளில் வெளிப்படுத்தியுள்ள இக்கவிஞன் ஹலியின் வால்வெள்ளி பற்றிப் பாடியிருப்பதானது தமிழ்க் கூறும் நல்லுலகிற்கு அவர் விட்டுச் சென்ற ஒரு பொக்கிசமாகும் வேறெக்கவிஞனும் இத் தூமகேது பற்றி இவ்வளவு பொருள் பொதிந்த பாடல்களைப் பாடிபிருப்பாரோ என்பதுசந்தேகத்திற்குரியதே

பாரதி வாழ்ந்த காலத்தை அவரின் ''சாதாரண வருஷத்து தூமகேது'' எனும் கவிதைகளால் அறியக் கூடியதாயுள்ளதுடன், ஹலியின் வால் வெள்ளியின் வரவும், இக்கவிஞனின் வாழ்வும் எப்போதும் இப்புவியில் இணைந்தேயிருக்கும்

## குறுநாவல்

(7 ம் பக்கத் தொடர்ச்சி)

''நல்ல - சரி - பிழை கண்டு பிடிச்சிட்டியள், விட்டால் எல்லாம் பிரச்சனையாய் போயிடும். பிறகுஅவளிட்டை இருந்து ஒரு சதமும் அறவாக் கேலாது. நாளைக்கு அல்லது நாளையிண்டைக்கு நான் சொன்னபடி செய்யுங்கோ'' என்று சொல்லிவிட்டு புவன சுந்தரி போய்விட்டாள்.

பொன்னம்பலம் சங்கடத்தில் ஆழ்ந்தார். அவர் போட்ட திட்டங்களுக்கு எதிராக அவர் மனைவி இயங்குவது அவருக்கு முதல் முறையாக மனைவி மேல் வெறுப்பை ஊட்டியது. [வளரும்]

# நாடோடிக் கதைகள்

தமிழில்: நீர்வை பொன்னையன்

## கற்பனாவாதிகள்

ஒரு ஓவியன் ஒரு இளவரசனுக்கு ஓவியங்களைத் தீட்டி வந்தான்

''வர்ணம் தீட்டுவதற்கு மிகக்கஷ்டமானவை எவை?''

இப்படி ஒருநாள் மன்னன் ஓவியனைக் கேட்டான்.

''நாய்கள், குதிரைகள் போன்றவை'' — ஓவியன் கூறினான்.

''மிகச் சுலபமானவை?'' — சந்தேகத்துடன் வினவினான் மன்னன்.

''பசாசுகளும் பூதங்களும், எங்களுக்கு நாய்களையும் குதிரைகளையும் நன்றாகத் தெரியும். ஏனென்றால் நாம் தினசரிஅவைகளைப் பார்க்கின்றோம். ஆகவே அவைகளது உருவங்களை அப்படியே வர்ணம் தீட்டுவது மிகக்கஷ்டம். இதனால்தான் இந்த விடயங்கள் மிகக்கஷ்டமானவை. ஆனால் பசாசுகளுக்கும் பூதங்களுக்கும் திட்டவட்டமான உருவமைப்பு இல்லை. அவைகளை ஒருவரும் பார்த்ததில்லை. அவற்றை நினைத்தபடி வரையலாம். அதனால் தான் அவை வரைவதற்குச்சுலபமானவை''

ஓவியனின் பதில் இளவரசனுக்குப் புரிந்ததோ என்னவோ?.

★

## திமிர்

ஒருநாள் புதரின்கீழ் படுத்திருந்த ஒருசிங்கம், கொட்டாவி விட்டுக் கொண்டு எழுந்து நின்று தனது உடம்பைச் சிலிர்த்துக் கொண்டு சுற்று முற்றும் பார்த்தது.

அங்கும் மிங்கும் பறந்து திரிந்து கொண்டிருந்த நுளம்புகள் சிங்கத்தின் கண்ணில் பட்டன.

நான் மிகவும்பலசாலியாக இருப்பதால் இந்த உலகத்தில் எவருக்கும் நான் பயப்படத் தேவையில்லை. கடவுளுக்கு நன்றி இந்த அற்பத்தனமான நுளம்புகளைப்போல் நான் பல வீனமானவனில்லை. அவைகளை எவராலும் நசுக்கிக் கொன்றுவிடமுடியும். அதனால் தான் அவைகள் எல்லோருக்கும் பயப்படுகின்றன.''

சிங்கம் அகங்காரத்துடன் கூறியது.

இதைக்கேட்ட நுளம்புகள் கடும் சினம் கொண்டன. இதற்குப் பதிலடி கொடுக்க முன்வந்தன.

''ஓய் சிங்கமே, நீ உருவத்தில் பெரிதாகவும் பலமுடையவனாகவுமிருப்பதால் உன்னை மிஞ்சியவர்கள் இல்லை என்று நினைக்காதே. நாங்கள் சிறியவை என்பது உண்மை. ஆனால் உன்னை எங்களால் தோற்கடிக்க முடியும்'' — ஒரு நுளம்பு கூறியது.

''வாயைமூடு, அற்பப் பிராணியே என்னிலும் பார்க்கப் பலமுடையவர் உங்களில் எவராவது இருக்கின்றாரா? கதைப்பதை நன்றாக யோசித்துக் கவனமாகக் கதைக்க வேண்டும் ஏனென்றால் என்னுடைய ஒருபாதத்தினால் உங்களில் அநேகரை நசித்துக்கொன்று விடுவேன்.'' — சிங்கம் கோபாவேசத்துடன் கர்ஜித்தது.

இதை நுளம்புகளால் பொறுக்க முடியவில்லை.

''சகோதரர்களே, வாருங்கள். சிங்கத்திற்கு ஒருபாடம் படிப்பித்துக் காட்டுவோம்.''

ஒருமுதிய நுளம்பு அனைத்து நுளம்புகளையும் அழைத்தது.

''எங்களைக் கிண்டல் செய்ததன் பலாபலனை அது சாகுமட்டும் நினைவில் வைத்திருக்கும்படி நாம் செய்ய வேண்டும்''

— அந்தமுதிய நுளம்பு உறுதியுடன் கூறியது.

இந்த அறை கூவலை ஏற்றுக் கொண்டு எல்லா நுளம்புகளும் படையெடுத்துச் சிங்கத்தின் உடலெங்கும் குத்த ஆரம்பித்தன.

சிங்கம் தனது வாலால் சுழற்றி அடித்ததுடன் முதலில் ஒரு பாதத்தினாலும் பின்பு மற்றப் பாதத்தினாலும் நுளம்புகளை அடித்தது. பின்பு அது தரையில் விழுந்து தனது நான்கு பாதங்களாலும் அடித்தது; தனது பற்களை நெருடியது.

பலன்?

ஒரு சில நுளம்புகளை சிங்கத்தினால் கொல்ல முடிந்தது தான். ஆனால் படைபடையாக நுளம்புகள் வந்து சிங்கத்தைத் தாக்கிக்கொண்டிருந்தன.

சிங்கம் காட்டில் துள்ளிப் பாய்ந்து, புதரைச் சுற்றிச் சுற்றி ஓடிக்கொண்டிருந்தது. ஆனால் நுளம்புகள் இடைவிடாது தாக்கிக் கொண்டிருந்தன.

தன்னால் நுளம்புகளுடன் போராட முடியாது என்று உணர்ந்த சிங்கம் இறுதியில் நுளம்புகளை தாக்குவதை நிறுத்தும் படி மன்றாடிக் கேட்கத் தொடங்கியது.

''தயது செய்து நிறுத்துங்கள். என்னைத்தாக்குவதை தயவு பண்ணி நிறுத்துங்கள்''

சிங்கம் மன்றாடியது, நான் உங்களைக் கேலிசெய்ய வில்லை. உண்மையில் நான் கிண்டல் செய்யவில்லை எனக்கு அனுதாபம் காட்டுங்கள் கடவுள் பேரால் உங்களை வேண்டுகின்றேன்.''

கருணைகாட்டும் படி சிங்கம் நுளம்புகளை இரங்கிக்கேட்டது.

''சிங்கப்பிள்ளையே இனி மேல் உனது ஆணவத்தைக் காட்டாதே. திமிர்தனமாகப் பேசாதே''

நுளம்புகள் கூறிக்கொண்டு சிங்கத்தின் மீது அனுதாபம் கொண்டு அதைத்தாக்குதை நிறித்திவிட்டு ஒரு பெரும் கரிய முகிலைப் போல் காற்றில் மிதந்து பறந்தன.

அவமானம் தாங்க முடியாமல் சிங்கம் சப்த நாடிகளும் அடங்கி ஒடுங்கிப் போய் தலை குனிந்து நின்றது.

# புதிய தடுத்து வைத்தல்வரி

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

| | | |
|---|---|---|
| 2. வட்டி | | 48,000 |
| 3. வாடகை | | 12,000 |
| மொத்த வருமானம் | | 60,000 |
| கழி-- விடுதொகை | | இல்லை |
| '' காப்புறுதி | | 10,000 |
| வரிவிதிப்பிற்குரிய வருமானம் | | 50,000 |
| கட்டவேண்டிய வரி | | |
| 21,000 x 10% | 2,100 | |
| 24,000 x 20% | 4.800 | |
| 5,000 x 30% | 1,500 | |
| | 8,400 | |
| கழிக்கப்பட்ட 20% வரி | 9,600 | |
| மேலதிக கழிவு (மீளளிப்பு) | 1,200 | |

### சூழ்நிலை 5

* சவூதியில் 3 வருடங்கள் தொழில்
* வருடாவருடம் தவறாமல் இலங்கைக்கு வந்து போபவர்.

### வரி ஆண்டு 1986 / 87

| | | வருமானம் | வரிக்கழிவு |
|---|---|---|---|
| 1. தொழில் வருமானம் [சவூதியில்] ரூ. 72,000 | | வரிவிலக்கு | |
| 2. வட்டி | | 48,000 | 9,600 |
| 3. வாடகை | | 12 000 | |
| மொத்தவருமானம் | | 60,000 | |
| கழி— விடுதொகை | 27,000 | | |
| காப்புறுதி | 10 000 | | |
| | | 37,000 | |
| வரிவிதிப்பிற்குரிய வருமானம் | | 23.000 | |
| கட்ட வேண்டிய வரி | | | |
| 21,000 × 10 % | 2,100 | | |
| 2,000 × 20 % | 400 | | |
| | 2,500 | | |
| கழிக்கப்பட்ட 20 % வரி | 9 600 | | |
| மேலதிக கழிவு [மீளளிப்பு] | 7,100 | | |

இங்கே 5 % கழிவே போதுமானது.

**பின்குறிப்பு:-**

தனது நியாயமான செலவு போக மிகுதி வருமானத்தை சவூதியிலிருந்து இலங்கைக்கு அனுப்பினால் மாத்திரமே வெளிநாட்டு வருமானத்திற்கு இங்கு வரி விலக்கு அளிக்கப்படும்

**குறிப்பு**

1 குறைவாக வரி செலுத்த வேண்டியவர்கள், உள்நாட்டு இறைவரித்திணைக்களத்திற்கு வழிநிறுத்தல் (Direction) ற்காக விண்ணப்பிக்க வேண்டும்.

2 வரிசெலுத்த வேண்டிய வருமானமற்றவர்கள், தங்கள் வங்கிக்கோ நிதிநிறுவனத்திறகோ வரிக்கழிவை ஏற்படுத்த வேண்டாம் என்று விண்ணப்பிக்கலாம்.

## பிரயாண ஒழுங்குகள்

அவுஸ்திரேலியா செல்வதற்கு பிரயாண சீட்டுக்களும் பிரயாண காசோலைகளும் சிரமமின்றி உடனடியாக செய்து தரப்படும். அவுஸ்திரேலியாவுக்கு குடும்பமாக செல்ல விரும்புவோருக்கு பிரத்தியேக சலுகை செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு:

ராதா,
21, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
[C-1684]

## விற்பனைக்கு

இலக்கம் 40 ஸ்ரீ 70
தொடர் இலக்கம் உடைய
இசுசு (ISUSU) J. C. R. 500
36000 கிலோமீட்டர் ஓடியது. 22' தேக்கு பொடி.
மொடல் — 1984
பார்வை இடும் இடம்:

## வூட்லன்ட் டயர் சேவிஸ்

பண்டாரநாயக்க மாவத்தை,
இரத்தினபுரி.
T. P. 0452506 (C 1710)

## INSTITUTE OF TECHNICAL STUDIES

இந்தியா

மாணவ மாணவிகளுக்கான விஷேடவகுப்புகள் ஒவ்வொரு மாதமும் தொடங்கவுள்ளன.

1. கம்பியூட்டர் பயிற்சி ... 12 மாதங்கள்
2. ரெலக்ஸ் பயிற்சி ... 3 மாதங்கள்
3. டிப்ளோமா இன் எலற்ரோனிக்ஸ் 12 மாதங்கள்
4. டிப்ளோமா இன் சிவில் என்ஜினியறிங் 12 மாதங்கள்
5. டிப்ளோமா இன் ரெலிவிஷன் இன்ஜினியறிங் 6 மாதங்கள்

இந்தியாவில் A/L 3 பாடங்களுடன் B. Com. படிக்க விருப்புபவர்களும் எல்லா லண்டன் பரீட்சைகளுக்கும், பயிற்சி அளித்து இந்தியாவில் பரீட்சை எழுதுவதற்கு சகல ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும் விபரங்களுக்கு நேரில்:

### ஹரி ஹரன் என்ரபிறைஸ்

337, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம். C 1750

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் செல்லையா ஆறுமுகம்
(பிரபல வர்த்தகர்)

தோற்றம்: 19-12-1923
மறைவு: 16-03-1985

குடும்பத்தின் தலைவனாய் ஒளிவிளக்காய் வாழ்ந்து நொடிப்பொழுதில் எம்மைவிட்டுப் பிரிந்தாலும் தங்கள் நினைவு எம்மை என்றென்றும் விட்டகலாது. தங்கள் ஆத்ம சாந்திக்காக நாம் அனைவரும் வழிபடும் மாவீசந்தி விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கிறோம்.

15-04-86] செவ்வாய்க்கிழமை நடைபெறும் அந்தியேஷ்டி, சபிண்டிகரணக்கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
குடும்பத்தினர்.

'சீதாலட்சுமி வாசா'
தென். அலவாய்.
C 1690

## உருக்கமான வேண்டுகோள்

புனிதமான இயக்கங்களுக்கு,

எமது தொழிற்சாலை இயக்குனர் திரு. வேலுப்பிள்ளை சிவஞானம் கடந்த 09-04-1986 புதன்கிழமை இரவு இனந்தெரியாத நபர்களால் அவர் வீட்டிலிருந்து கடத்திச் செல்லப்பட்டுள்ளார். இதனால் தொழிலாளர்கள் தொழிலின்றி பாதிக்கப்பட்டுள்ளோம். இவரை உடனடியாக எவ்வித நிபந்தனைகளுமின்றி மனிதாபிமான முறையில் விடுதலை செய்யும்படி சகல இயக்கங்களையும் தொழிலாளர்கள் ஆகிய நாம் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தொழிற்சாலை ஊழியர்கள்,
எம். எஸ். இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்,
கோண்டாவில்.
C 1747

## எமது நன்றிகள்

எமது வீட்டில் 11-3-86-ல் கடத்திச்செல்லப்பட்ட HONDA C 86 ஸ்ரீ 909, (CD 125) மோட்டார் சைக்கிள் புனித இயக்கம் ஒன்றின் தலையீட்டால் மீண்டும் 10-4-86-ல் பெற்றுக்கொண்டோம். இந்தப் புனித இயக்கத்தினருக்கும் இதில் உதவிகள் பல புரிந்த நண்பர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இப்படிக்கு,

### க. செல்வநாதன்,

திருச்செல்வம் வீதி, கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (C 1725)

## கணக்கு வைப்பாளர் தேவை

[BOOK KEEPER]

புங்குடுதீவு சர்வோதய நிலையத்திற்கு கணக்கு வைப்பாளர் ஒருவர் தேவை. கணக்குவைப்புத் துறையில் அனுபவம் வாய்ந்த ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். திறமைக்கேற்ப வேதனமும், தங்குமிட வசதியும், உணவுவசதியும் அளிக்கப்படும். 25-04-86 இற்கு முன் அமைப்பாளர் சர்வோதயம், புங்குடுதீவு என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

சர்வோதயம்,
புங்குடுதீவு.
[C-1722]

## கேக் கண்காட்சி

அனித்தா ஸ்கூல் ஒப் டிரெஸ் மேக்கிங் கேயர் ஸ்ரைல் அன் குக்கறி நிறுவனத்தில் இம்மாதம் 27-ம், 28-ம் திகதிகளில் [ஞாயிறு, திங்கள்] மூழு நாளும் கேக் ஐசிங், தலை அலங்காரம், பூக்கள் போன்ற கண்காட்சி நடைபெறும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். பிரவேசம்: ரூபா 5-00 மட்டும். இப்போதைய மாணவர்கள் கண்காட்சியில் பங்குகொள்வோர் அல்லாதவரும் இம்மாதம் 20-ந் திகதிக்குமுன் என்னுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

### Anita School of Dressmaking

HAIRSTYLE and COOKERY,
Poonarimarathady, Kokuvil East.
[C 1674]

## "டைனமிக்கா"

பணத்தை மீதப்படுத்த
தரத்தைத் தியாகம் செய்வதில்லை
டைனமிக்கா தளபாடங்களை வாங்கும்போது
தரத்தின் உத்தரவாதத்தையும் சேர்த்தேவாங்குகிறீர்கள்

நவீனமான
### உருக்குத் தளபாடங்கள்
கவர்ச்சிகரமான
### தேக்குத் தளபாடங்கள்

DINNING TABLES CHAIRS, TV STANDS, CUSHIONED HALL SETS, BEDS, SHOW CASES, CABINETS, CUPBOARDS, WARDROBES, DRESSING TABLES, BOOK RACKS, ETC.
WIDE SELECTION

விசேட விலைக்கழிவுகள் டெலிவரி வசதிகள்

Dynamica

தரத்தின் சின்னம்

காட்சியறை :-
### DYNAMIC ENGINEERING LTD.
476, MAIN STREET, CHUNDIKULI.
(Opposite St. Johns College) A 436

Dyn Ads

## அரசடி விநாயகர் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

நிகழும் குரோதன வருடம் பங்குனி மாதம் 15ஆம் நாள் (28-03-86) பாலஸ்தாபன கும்பாபிஷேகம் செய்யப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம். இதனைத் தொடர்ந்து நடைபெறும் திருப்பணி வேலைகள் தடை ஏதுமின்றி சிறப்பாகவும் விரைவாகவும் இனிது நிறைவேற தங்களால் இயன்ற பொருளுதவி செய்யும்படி பணிவன்புடன் வேண்டுகின்றோம். இதற்குப் பொருளுதவி செய்வோர் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியவர்களிடம் கொடுத்து பொருளாளரின் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளும்படியும் இவை தவிர்ந்த வேறு எவரிடமும் பொருளுதவி செய்ய வேண்டாமென்றும் தயவாக வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
ஆலய பரிபாலன சபைக்காக

சட்டத்தரணி க செ. சோமசேகரம்,
தலைவர்

ப. சந்திரசேகரம், செயலாளர்.
வே. குகமூர்த்தி, பொருளாளர்.
A 579

# BRITE SOAP WASHES BRIGHT




Net Weight: 130 Grams Price: Rs. 2 25

கைதேர்ந்த தொழிலாளர்களால்
விஞ்ஞானமுறைப்படி தயாரிப்பவர்கள்
TURBOW COMMERCIAL - ALAVEDDY

★ ★ ★ ★

பிரகாசமான சலவைக்கு
பிறைற் சோப்

[A 239]


## தீவிர தேடுதல்

[கிளிநொச்சி]

கோணாவில் அக்கராயன் குளப்பகுதிகளில் கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து சென்ற ஆயுதப் படையின் கறுப்புடைப் பிரிவினர் தீவிர தேடுதல் வேட்டைகள் மேற்கொண்டனர்.

நேற்றையதினம் இடம் பெற்ற இத் தேடுதலில் சுமார் 100 பேர் வரை ஈடுபட்டிருந்தனர்.

## "கிறீன்லேட்" மென் பந்துப் போட்டி

[யாழ்ப்பாணம்]

யாழ். " கிறீன்லேட்'' விளையாட்டுக் கழகம் மட்டுப்படுத்தப்பட்ட " 25 ஓவர்கள் கொண்ட 11 பேர் பங்கு பற்றும் மென் பந்துக் கிரிக்கெட் போட்டியை யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடாத்தவிருக்கிறது.

நொக்கவுட் முறையில் நடாத்தப்படவிருக்கும் இப் போட்டி மத்தியூஸ் வீதியிலிருக்கும் மேற்படி கழகத்தின் மைதானத்தில் இம் மாதம் 15ம் திகதிக்குப்பின் மைதானத்தில் நடைபெறுமென இக் கழகத்தின் காரியதரிசி திரு. நீல்ஆம்ஸ்ரோங் தெரிவித்தார். [வி]


## பத்திரிகைத்துறை பயிலுனர்கள்

''ஈழநாடு'' ஆசிரியர் பீடத்தில் பத்திரிகைத்துறை பயிலுநர்களுக்கான பதவி வெற்றிடம் உண்டு. கல்வி மற்றும் தகுதிச் சான்றுப் பிரதிகளுடன் கீழ்க்காணும் விலாசத்திற்கு விண்ணப்பம் செய்க.

விண்ணப்பங்கள் 18-04-86 வரை ஏற்றுக்கொள்ளப் படும்.

ஆசிரியர் பகுதி பயிலுனர்,
நிர்வாகி,
த. பெ. இல. 49, யாழ்ப்பாணம்.

(A 575)



## பிரயாண ஒழுங்குகள்

(டென்மார்க்)

குறைந்த கட்டணத்தில் டென்மார்க் [Denmark] செல்வதற்கான ஒழுங்குகள் உடன் செய்து தரப்படும்.
அத்துடன் பிரான்ஸ், கனடா, அவுஸ்திரேலியா, ஜேர்மன் போன்ற இடங்களுக்குச் செல்வதற்கும் ஒழுங்குகள் செய்து தரப்படும்.
தொடர்பு கொள்ளும் முகவரி:

**ராம்ஜீ லொட்ஜ்,**

361, 363, காலிவீதி, கொழும்பு-4.
14, யூப்பிலி பஜார், யாழ்ப்பாணம்.

[C 1653]



# LANKA CEMENT LIMITED

## KANKESANTHURAI.

### முருங்கன் களிமண்ணுக்குச் சமமான களிமண் யாழ். மாவட்டத்தினுள் தேடி எடுத்து லங்கா சீமெந்து லிமிட்டெட்டுக்கு விநியோகித்தல்

எமது விரிவான ஆய்வின் பயனாக யாழ்ப்பாண மாவட்டத்தில் முருங்கன் களிமண்ணுக்குச் சமமான களிமண் இருப்பதாக அறியப்பட்டுள்ளது. எனவே மேற்படி களிமண்ணை எமக்கு விநியோகிக்க ஆர்வமுள்ள ஒப்பந்தக்காரர்கள் கீழ்க்கண்டவாறு எம்மைத் தொடர்பு கொள்ளும்படி தாழ்மையுடன் வேண்டிக் கொள்ளுகிறோம்.

1. ஒப்பந்தக்காரர்கள் தங்கள் களிமண் எடுக்கும் பிரதேசத்தினைக் காட்டும் ஒரு சாதாரண வரைபடம் (LOCATION DRAWING) ஒன்றை அமைத்து கீழ்க்காணும் கேள்விப்பத்திரத்துடன் அனுப்பவேண்டும்.

2. வரைபடத்தில் காட்டப்பட்ட பிரதேசத்தில் எடுக்கப்பட்ட ஒவ்வொன்றும் ஒவ்வொரு கிலோ நிறையுடைய 3 களிமண் மாதிரிகள் பெயர், சுய விலாசமிட்டு எடுக்கப்பட்ட பிரதேசத்தின் பெயர் கேள்விப்பத்திர இலக்கமான LCL/SU/T/01/86 குறித்து அரக்கு முததிரையிட்டு 25-04-1986 காலை 10-30 மணிக்கு முன் கேள்விப்பத்திரத்துடன் 'உதவிப் பொதுமுகாமையாளர்' காரியாலயத்தில் சேர்ப்பிக்கவும்.

3. ஒப்பந்தக்காரர்கள் வெவ்வேறுஎத்தனைபிரதேசங்களிலும் இருந்து களிமண்ணை விநியோகிக்கலாம். ஆனால் களிமண் எடுக்கப்படும் ஒவ்வொரு பிரதேசத்தினதும் சாதாரண வரைபடத்துடன் (LOCATION DRAWING) ஒவ்வொன்றும் ஒவ்வொரு கிலோ நிறையுடைய 3 களிமண் மாதிரிகள் ஒவ்வோர் பிரதேசத்தில் இருந்தும் பெறப்பட்டு மேற்குறிப்பிட்டபடி பிரதேசத்தின் பெயர், ஒப்பந்தகாரரின் பெயர், சுய விலாசம், கேள்விப்பத்திர இலக்கம் என்பன எழுதப்பட்டு கேள்விப்பத்திர முடிவு நாளாகிய 25-4-86 காலை 10-30 மணிக்கு முன் எமது உதவிப் பொதுமுகாமையாளர்காரியாலயத்தில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

4. (I) மேற்படி களிமண்ணை எடுக்கப்படும் பிரதேசத்தில் விநியோகிப்பதற்கான 1 தொன்னுக்கான விலைக்கூறு.
   (II) மேற்படி களிமண்ணை அப்பிரதேசத்திலிருந்து ஏற்றி எமது தொழிற்சாலைக்கு கொண்டுவந்து எமது களிமண்சாலையில் இறக்குதல் தொன் ஒன்றுக்கான விலைக்கூறு.
   (III) நாள் ஒன்றுக்கு விநியோகிக்கக்கூடிய மிகக்குறைந்த தொகை களிமண் தொன்னில். மேற்படி விலைக்கூறுகளை தங்களால் தயாரிக்கப்பட்ட 2 பிரதிகள் கொண்ட படிவங்களில் தயாரித்து அரக்கு முத்திரை இடப்பட்ட 9''X4'' அளவு கொண்ட உறையில் இட்டு

"உதவிப் பொதுமுகாமையாளர்",
லங்கா சீமெந்து லிமிட்டெட், காங்கேசன்துறை

என்ற விலாசமிட்டு உறையின் இடது பக்க மேல்மூலையில் கேள்விப்பத்திர இலக்கமான LCL/SU/T/01/86 எழுதி 25-04-1986 காலை 10-30 மணிக்கு முன் உதவிப் பொதுமுகாமையாளர் காரியாலயத்தில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் சேர்ப்பிக்கவும். மேற்படி கேள்விப்பத்திரங்கள் கேள்விப்பத்திர முடிவு நேரமாகிய 10-30 மணிக்குப் பின் உடனடியாகத் திறக்கப்படும்.

மேற்படி விடயமாக மேலும் தகவல்களைப் பெற விரும்புவோர் விநியோக அதிகாரியை அவரது காரியாலயத்தில் காரியாலய நேரங்களில் சந்திக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

பொதுமுகாமையாளர்,

**லங்கா சீமெந்து லிமிட்டெட்,**

காங்கேசன்துறை.

09-04-1986. (A 432)



# Computer Programming and Data Processing Course

(BASIC LANGUAGE)
6 MONTHS

Week-end classes by qualified and experienced panel of lectures.

Commencement:- 27th April, 1986 at 10-00 a. m.

Fees:- Rs: 1500/- (தவணைமுறையிலும் செலுத்தலாம்.)

60 மணித்தியாலங்களுக்குக் குறையாத Practicals.

Ideal for those who seek employment abroad.

குறிப்பு:- வகுப்புகள் பாதுகாப்பான இடத்தில் நடைபெறும்.

அச்சடித்த பாடக்குறிப்புகள் தமிழிலும் வழங்கப்படும்.

**CANTABIA INSTITUTE**

(Pioneers in Computer Education)
21, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(A353) தொலைபேசி: 24201.



## மேர்ச்சன்ட் பிறுன்ஸ் லிமிட்டெட்

### தொலைந்த மாற்றக்கூடிய நிலையான வைப்புப்பத்திரங்கள்

கீழே குறிப்பிடப்பட்ட வைப்பாளர்கள் தமது பெயர்களுக்கெதிரான இலக்கங்களைக் கொண்ட மாற்றக்கூடிய நிலையான வைப்புப்பத்திரங்களின் மூலப் பிரதி தவறவிடப்பட்டு, தொலைந்து அல்லது அழிந்து போனமையால் அவற்றிற்கு பிரதி பத்திரங்கள் வழங்கும்படி என்னைக் கேட்டுள்ளார்கள். இவ்வறிவித்தலின்படி இரு கிழமைகளுக்குள் எவரும் உரிமை கோராது அல்லது எதிர்ப்புத் தெரிவிக்காவிடின் நான் பிரதி பத்திரத்திற்கான விண்ணப்பத்தை பரிசீலிப்பேன். அத்துடன் மூலப்பிரதிகள் வறிதாக்கப்பட்டது எனக் கருதப்படும்.

| பெயரும், விலாசமும் | பத்திர இல. |
|---|---|
| 1. திரு. அந்தனி பிரான்சிஸ் பெனடிக், இல. 13, கண்டி வீதி, யாழ்ப்பாணம். | 00370 |
| உம் | |
| திருமதி மேரி ஒப்லெற் பெனடிக்ற், இல. 13, கண்டி வீதி, யாழ்ப்பாணம். | |
| 2. திருமதி மேரி ஒப்லெற் பெனடிச்ற், இல. 13, கண்டி வீதி, யாழ்ப்பாணம். | 00995 |

அ. சோமசுந்தரம்பிள்ளை,
முகாமைத்துவ இயக்குநர்,

**மேர்ச்சன்ட் பிறுன்ஸ் லிமிட்டெட்.**

(A 577)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



**அமரர் செல்லத்துரை நாகரத்தினம்**
(சின்னராசா C. N 800)

தோற்றம்: 26-7-1945

மறைவு: 14-03-1986

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் பாசத்துடனும் எம் வாழ்வை உயரவைக்க அயராது உழைத்த அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்திக்காக எங்கள் உயிர் உள்ளவரை ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்:
தாய், சகோதரங்கள்,
மைத்துனர்கள்.

2-ம் வட்டாரம்,
வேலணை கிழக்கு,
வேலணை C 1759

**எம்பயர் திரையில்**
10-30, 2-30, 6-30, 9-15
விஜயகாந்—மோகன்
**வேங்கையின் மைந்தன்**

இன்று குதூகல ஆரம்பம்
**எம்பயர் 'B' சினிமா**
10-45, 2-45, 7-00
அகில இந்தியாவிலும் வெற்றிநடைபோட்ட
அமிதாபச்சன் நடித்த
**கூலி**

LIDO Jaffna
10-30, 2-30, 6-30
சிவாஜி, உஷாநந்தினி
சாரதா, எம்.ஆர்.ஆர்.வாசு
நடித்த
**என்னைப்போல் ஒருவன்**
(கலர்)

5வது வாரம்
**வெலிங்டன்**
10-30, 2-30, 6-15
சிவகுமார், மோகன்
அம்பிகா, கவுண்டமணி
நடித்த
**நான் பாடும் பாடல்**
(கலர்)

**வின்ஸர் திரையில்**
12-4-86 முதல்
10-30, 2-30, 6-15
முத்துராமன், ஜெயலலிதா
மனோரமா, M R. R. வாசு
சோ, சுந்தரராஜன்
நடித்த
பாலசந்தரின்
**சூரியகாந்தி**
மனோரமாவின்
தெரியாதோநோக்கு பாடல்
பாரதிதாசனின்
'பரமசிவன் கழுத்திலிருந்து பாம்பு' பாடல்கள் கேட்டு மகிழுங்கள். [புதிய பிரதி]
(குறிப்பிட்ட சில தினங்கள்)

## வைத்தியம்

**உங்கள் நோய் இன்னமும் தீரவில்லையா?**

உடலில் என்ன வியாதியானாலும், குழந்தை முதல் பெரியோர்வரை இருபாலாரும் ஆயுர்வேத, ஹோமியோபதி வைத்தியர்களின் கூட்டு ஆலோசனை பெற்று குணம்பெற முத்திரையுடன் விலாசமிடப்பட்ட கடித உறை அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள்.

முகவரி: Dr. N. P. எமிலியானுஸ்,
வைத்திய ஆலோசகர்,
இல. 173, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C 1727)

## இடமாற்றம்

பலாலியைச் சேர்ந்த பிரபல வாத வைத்தியர், கலாநிதி (DR), வீ. பஞ்சாட்சரம் (ஐயர்) அவர்கள் தற்போது அச்செழு வாசிகசாலை அருகில் வைத்தியசாலையை மாற்றியுள்ளார் என சகலருக்கும் அறியத் தருகிறேன்.

இங்ஙனம்,
**மருமகன் டாக்டர் வீ. பாலகுமார்,**
அச்செழு.
(C-1761)

வலி. கிழக்கு
தெ.ப.ப,நோ.கூ. சங்கம்

## வெற்றுச் சாக்கு கேள்வி விண்ணப்ப விளம்பரம்

**அறிவித்தல்**

வல-கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 3,000-க்கு வேற்பட்ட வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திரம் மூலம் விற்பனைக்கிருக்கின்றன. மீளளிப்புவைப்புப் பணமாக ரூபா 250/-உம், கேள்விப் பத்திரம் ஒன்று ரூபா 1/-உம் செலுத்தி சங்க வேலைநாட்களில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் 23-04-86-ம் திகதி புதன் கிழமை நண்பகல் 12-00 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

**பொதுமுகாமையாளர்,**

நீர்வேலி,
1986-04-10. [A 576]

## முதலாண்டு நினைவஞ்சலி



குமாரு சிவகுரு
[இளைப்பாறிய தலைமை ஆசிரியர்]

மலர்வு: 14-05-1913
உதிர்வு: 13-04-1985

ஆண்டுத் திதி,
02-05-1986

''கல்லு முள்ளு பாதையிலே கவனமாக எமை வழி நடத்தி கரை சேரும் நேரத்திலே காலன் உமை அழைத்தனனே!
என்றென்றும் நின் நினைவுகள் எமைவிட்டு நீங்காது. தங்களின் ஆத்ம சாந்திக்கு ஆண்டவனிடம் எம் பிரார்த்தனைகள்.''

தங்களின் பிரிவால் துயருறும்:
**மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்.**
3, நீர்ப்பாசன மனை,
செங்கலடி. [A 1734]

## 1-வது ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் க. பரராசசிங்கம்**
(வைத்தியசிரோன்மணி)

தோற்றம்: 28-04-1904

மறைவு: 26-03-1985

பாசமிகு குடும்பத் தலைவனாக நல்வழிகாட்டியாக அமைந்து தெய்வம்போல் எவ்வித குறையுமின்றி எம்மைக் காத்ததுமன்றி எத்தனையோ உயிர்களையும் பேணிக்காத்தஉத்தமரைநினைவு கூறும் நன்னாள் இன்றாகும்.

இவ்வண்ணம்
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கஸ்தூரியார் வளவு.
C 1667


## பெங்களூர் மகாநாட்டில்...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

ஆனால் தமிழ்ப் பிரமுகர்கள் மூவரும் இம்மாநாட்டைபகிஷ்கரிப்பதென இப்போது முடிவு செய்துள்ளனர்.

இது சம்பந்தமாக சட்டத்தரணி சாம் தம்பிமுத்து 'ஈழநாடு'க்கு அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார். அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''சிங்களப் பிரமுகர்களே அரசாங்கத்தைத் தமிழரின் நீதியானகோரிக்கைக்கு இணங்கிவரச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

''இலங்கைத் தமிழரைப் பொறுத்த வரையில் தமிழ்த் தலைவர்கள் ஆகக் குறைந்தபட்சக்கோரிக்கைகளை ஏற்கனவே சமர்ப்பித்துவிட்டனர் இக் கோரிக்கைகளுக்குக் குறைந்த எதனையும் எந்த ஒரு மகாநாட்டிலும் தமிழர்கள் சமர்ப்பிப்பது உசிதமானதல்ல இத்தகைய மகாநாட்டில் இலங்கை குழுவின் சார்பில் தமிழர் பிரதிநிதிகள் இடம் பெறுவதில் அர்த்தமில்லை. ஆகவே இம்மகாநாட்டில் நாம் கலந்து கொள்ளப் போவதில்லை.'' (மா)

## இலங்கை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ரொமேஷ் பண்டாரி இன்று சென்னையில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களைச் சந்தித்து உரையாடினார்.

திருப்பதி செல்லும் வழியில் பண்டாரி நடாத்திய மேற்படி சந்திப்பின்போது இலங்கையில் நடைபெற்றுவரும் இனப் படுகொலைகள் பற்றித் த. வி. கூட்டணித் தலைவர்கள் திரு. பண்டாரியிடம் விவரமாக எடுத்துக் கூறியுள்ளதாகத் தெரிய வருகின்றது. (ஷ-பி)

## பார்த்தசாரதி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அவர் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளமாட்டார் என்றும் 'இந்து' செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், முன்னர் இலங்கை அரசின் நிலைமையை விட புதிய ஆலோசனைகள் அரசின் நிலையை எவ்வாறு பிரதிபலிக்கின்றன என்பது பற்றி அவர் விளக்கமளிப்பாராம்.

இனப்பிரச்னை குறித்து இலங்கை அரச தரப்பிலிருந்து ஆக்க பூர்வமான யோசனைகளுடன், இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜனுப் ஹமீத் இந்தியா வருவார் என்ற எதிர்பார்ப்பில் புதுடில்லியில் பேச்சு வார்த்தைகளுக்கான ஆரம்பகட்ட ஆயத்தங்கள் ஆரம்பமாகியுள்ளன.

செயல் திட்ட அறிக்கையில் வழங்கப் பட்டிருந்தவைகளை விட இந்த ஆலோசனைகள் குறித்து இந்தியா முதலில் பரிசீலித்த பின்னரே தமிழ்த் தலைவர்களின் கருத்துக்களைச் செவிமடுத்து பேச்சுவார்த்தைகள் நடத்துவது குறித்து இந்தியஅரசு தீர்மானிப்பது நல்லது எனவும் ரெட்டி மேலும் எழுதியுள்ளார். (ய- பி)

நல்லூர்

## ''லியோ'' கழக நிகழ்ச்சிகள்

[யாழ்ப்பாணம்]

நல்லூர் லியோ கழகத்தால் இன்று காலை 9-30க்கு நடாத்தப்படவிருந்த நிகழ்ச்சிகள் தவிர்க்கமுடியாத காரணத்தால் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாகவும், பிற்பகல் 2-30 நிகழ்ச்சிகள் நடைபெறுமென்றும் கழகத்தினர் தெரிவித்துள்ளனர். [மா]

## புத்தாண்டை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

15ம், 16ம் திகதிகளில் நண்பகல் 12-50க்கும், பிற்பகல் 2-40க்கும் வவனியாவிலிருந்து புறப்படும் இரண்டு ரயில்களும் இரவு 6-05க்கும், 8-00 மணிக்கும் மருதானையைச் சென்றடையும்.

யாழ்ப்பாணத்திலிருந்து வவனியா புகையிரத நிலையம் செல்லும் பிரயாணிகளின் வசதிக்காக வட பிரதேச போக்குவரத்துச் சபை இணைப்பு பஸ் சேவைகளை நடாத்த ஒழுங்கு செய்துள்ளது.

15ம 16ம் திகதிகளில் காலை 5-30 மணியில் இருந்து ஒவ்வொரு அரை மணித்தியாலத்துச்கொரு தடவைகளும் 7 மணிவரை இணைப்பு பஸ் சேவை ஒழுங்குசள் செய்யப்பட்டுள்ளன.

ரயில் பிரயாணிகள் தங்கள் பிரயாணச் சீட்டுக்களை வவனியா புகையிரத நிலையத்திலேயே பெற்றுக்கொள்ளமுடியும். பிரயாணச்சீட்டுக்கள் யாவும் காசுக்கட்டளைக்கே வழங்கப்படவிருப்பதால் ''பிரதம கணக்காளர்'' தபாற் கந்தோர், கொழும்பு என்ற முகவரிக்கு காசுக்கட்டளைகள் பெறப்படவேண்டும்.

2ம் வகுப்பு பிரயாணிகள், ரூபா 103-90 சதத்திற்கும், 3ம் வகுப்புப் பிரயாணிகள் ரூபா 38-20சதத்திற்கும் காசுக் கட்டளை பெறுக்கொள்ள வேண்டும் என்று புகையிரத நிலைய உயர்அதிகாரி தெரிவித்தார். இந்தக் காசுக்கட்டளைகளைக் கொடுத்தே டிக்கட்டுகளைப்பெறவேண்டும். [வா]


அனைவருக்கும் இனிய
**புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!!**
சகல மக்களுக்கும் அமைதியும் சுபீட்சமும் நிலவ, மக்ஸல் விநியோகஸ்தர்கள் வேண்டிக்கொள்கிறார்கள்.

maxell
**MAXS DISTRIBUTORS**
14, JAFFNA ROAD, MANIPAY.
20, JUBILEE BAZAAR, JAFFNA. Tha-

உலக மக்களின் அபிமானம் பெற்ற ''மக்ஸல்,'' தயாரிப்புக்களை நாமே யாழ்நகரில் விநியோகிக்கின்றோம்.
இனிய நாதத்துக்கு மக்ஸல் கசெட்டுகள், நீடித்த பாவனைக்கு மக்ஸல் பற்றறிகள், அழகுசாதனப் பொருட்கள், பிளாஸ்டிக் உற்பத்திப் பொருட்கள் அனைத்துக்கும்.

MAX DISTRIBUTORS 20. யூபிலி பஸார், யாழ்ப்பாணம்.
மக்ஸ் டிஸ்ரிபியூட்டர்ஸ் 4, யாழ்ப்பாண வீதி, மானிப்பாய்.
(A 437)

# இன்று நள்ளிரவு மலரும் அக்ஷய புதுவருடம்!

[யாழ்ப்பாணம்]

இன்று நள்ளிரவு மலரப்போகும் அக்ஷய வருஷ தமிழ்-சிங்கள புத்தாண்டு இரகுநாதையர் பஞ்சாங்கப்படி, இன்று நள்ளிரவு 12 20 க்கு தனு இராசியில் பிறக்கின்றது திருக்கணித பஞ்சாங்கப்படி பின்னிரவு 3.12க்கு கும்ப இராசியில் பிறக்கிறது. சிங்கள இறணம பஞ்சாங்கப்படி இரவு 254க்கு கும்ப இராசியில் சிங்கள வருஷம் பிறக்கிறது. பொதுவாக எல்லாப் பஞ்சாங்கங்களின்படியும் கைவிஷேசம் திங்கட்கிழமை செய்யலாம். விருந்து, தொழிலுக்கு புதன்கிழமை ஏற்றது. [கெ]

# உலகத் தமிழ்ச் சங்கம் மதுரையில் உதயம்

[மதுரை]

மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கத்தை அங்குரார்ப்பணஞ் செய்து வைக்கும் மூன்று நாள் விழா இன்று கோலாகலமாக ஆரம்பமாகின்றது.

கலை நிகழ்ச்சிகள் முக்கிய பங்கு வகிக்கவுள்ள இம் மூன்றுநாள் விழாவைத் துவக்கி வைக்கவென நேற்றுத் தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம். ஜி ராமச்சந்திரன் தமது அமைச்சரவைச் சகாக்களுடன் மதுரை சென்றடைந்தார்.

உலகில் தமிழ் வழங்கும் நாடுகளைப் பிரதி நிதித்துவப் படுத்தும் வகையில் ஐம்பது பேர் கொண்ட உலகத் தமிழ்ச் சங்கச் செயலவை ஒன்று அமைக்கப்படவுள்ளதுடன், சங்கக் கலைக் கவிஞர்களுக்கு அவர்கள் பிறந்த ஊர்களில் நினைவு ஸ்தூபிகளை அமைக்கும் முக்கிய தீர்மானமும் மேற்படி மகாநாட்டில் இயற்றப்படவுள்ளது. (ஷ)

# அந்த ஊர்காவல் படையினர் மூவர் மீது விசாரணை

(மட்டக்களப்பு)

ஊர்காவல் படையினரின் தாக்குதலுக்குள்ளான முஸ்லிம் பாடசாலை அதிபரின் முறைப்பாட்டினைத் தொடர்ந்து விசாரணை மேற்கொண்ட பொலிசார் அப் பகுதி ஊர்காவல் படையின் தலைவரையும் அப்படையைச் சேர்ந்த மற்றும் இருவரையும் விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

காத்தான்குடி 6ம் குறிச்சியைச் சேர்ந்த முஸ்லிம் பாடசாலை அதியர் அல்ஹாஜ் எம். எம். ஏ. அஸீஸ் ஹஜியார் கடந்த செவ்வாய்க்கிழமை ஊர்காவல் படையினரால் தாக்கப்பட்டதுடன் வீதி வழியேகொண்டுசெல்லப்பட்டு அவமானப் படுத்தப்பட்டதும் தெரிந்ததே. [மா]

## டானியல் நண்பர்களுக்கு ..

தமிழகத்திலுள்ள ஒரு முன்னோடி வெளியீட்டு நிறுவனமான 'தோழமை'யின் பதிப்பாசிரியர் வே மு. பொதியவெற்பன் எழுத்தாளர் டானியல் தமிழகத்தில் சிகிச்சை பெற்றமை, நண்பர்களால் பராமரிக்கப்பட்டமை அன்னாரது இறுதியாத்திரை முதலிய விபர அறிக்கை ஒன்றை டானியலின் நண்பர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார். நெஞ்சை உருக்கும் இந்த அறிக்கை 20-4 86 வாரமலரில் இடம்பெறும்.

## 'மாற்று' விமர்சன அரங்கு

[யாழ்ப்பாணம்]

மாற்று இலக்கிய சஞ்சிகை விமர்சன அரங்கு இன்று பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் இந்து விடுதியில் நடைபெறவுள்ளது.

திரு என். முத்தையா தலைமையில் நடைபெறும் இவ்வரங்கில் யாழ்.மாநகர சபை ஆணையாளர் திரு சி வீ கே. சிவஞானம், கலாநிதி சோ. கிருஷ்ணராஜா, செம்பியன் செல்வன் செ. கந்தசாமி மாத்தளை - இராஜலிங்கம் செல்வி. பாமினி ஆகியோர் ஆய்வுரை நடத்துவார்கள்.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு சித்திரை மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram. Eelanadu, Telephone, 22389, 84126.

## மிதி பலகையில் வந்த இளைஞர் பாலத்துடன் மோதிப் பலி

[வவனியா]

புத்தாண்டைக் கொண்டாடுவதற்காக ரயில் பெட்டியில் மிதிபலகையின் நின்று பிரயாணம் செய்த இளைஞர் ஒருவர் பாலத்துடன் மோதுண்டதால் தலை சிதறிய நிலையில் பலியானார்.

தேற்றுக்காலை 10 மணியளவில் வவனியா பூவோயா பாலத்தடியில் இப்பரிதாபச் சம்பவம் இடம்பெற்றது.

மாங்குளத்தைச் சேர்ந்த எஸ் அசோக்குமார் [19 வயது] என்பவரே பலியானவராவார்.

புத்தாண்டை முன்னிட்டு நேற்றுக்காலை கொழும்பிலிருந்து வவனியா நோக்கி வந்த ரயிலில் ஏராளமான பிரயாணிகள் இருந்ததால், குறிப்பிட்ட இளைஞரும் ரயில் பெட்டியின் மிதிபலகையில் நின்று வந்ததாகவும், ரயில் வவனியாவை அண்மித்துக் கொண்டிருந்த சமயம் இளைஞர் பாலத்துடன் மோதி ஸ்தலத்திலேயே பலியானதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் விபத்து சம்பவத்தால் ரயில் அவ்விடத்தில் ஒரு மணித்தியாலம் தாமதித்து வவனியா ரயில் நிலையத்தை வந்து சேர நேரிட்டது [மா]

## அகதிகளை--

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பார்வையிடுவதற்காக அகதி முகாம்களில் தங்கியிருந்தவர்கள் நேற்று சென்ற போதே இச்சம்பவம் நேர்ந்ததாகக் கூறப்படுகிறது.

வாகனங்களில் சென்றவர்களும் சோதனையிடப்பட்டபின்னர் அம்மணமாக அடித்து விரட்டப்பட்டதாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா]

## ஸ்தலத்தில் பலி

[வவனியா]

கொழும்புக்கு பொருள்களை ஏற்றிச் சென்ற வவனியா லொறியொன்றின் கிளீனர் கொழும்பு மீன் சந்தைக்கு அருகில் வேகமாக வந்த லொறியொன்றுடன் மோதுண்டு ஸ்தலத்திலயே பலியானார் சாரதி பலத்த காயமடைந்தார்

## 'வீரகேசரி' இயக்குநர் காலமானார்!

(கொழும்பு)

''வீரகேசரி'' ஸ்தாபனத்தின் நிறுவன இயக்குநர் திரு கே. எம். காளிய பிள்ளை (80 வயது) நேற்று அவரது இல்லத்தில் காலமானார்.

இவர் பல்வேறு இந்து ஸ்தாபனங்களில் பதவி வகித்ததுடன் பல்வேறு தொழில் நிறுவனங்களின் பங்குரிமையாளருமாகவுமிருந்தவர். (ய)

# தாதிகளுக்காகத் தமிழிளைஞர் உபவாசம்!

[கொழும்பு]

வெலிக்கடை 'தமிழ் வார்ட்டில்' தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள்' தாதி மாருக்கு ஆதரவு தெரிவித்து உண்ணவிரதம் இருந்த பௌத்த மத பிக்குகள் இனந் தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டதை ஆட்சேபித்து ஒருநாள் உண்ணு விரதத்தை மேற் கொள்வதென்று தீர்மானித்துள்ளார்கள். [ய - பி]

# இந்திய அகதிமுகாமிலுள்ள ஈழக் குடும்பங்களை இணைக்க தமிழ்நாடு அமைச்சர் உத்தரவு!

(சென்னை)

இலங்கையிலிருந்து இந்தியாவுக்குச் சென்று வெவ்வேறு முகாம்களில் வாழும் கணவன் மனைவிமாரை ஒரே இடத்தில் வசிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு தமிழக மறுவாழ்வு, வேலை வாய்ப்புத் துறை அமைச்சர் திரு ரி.ராமசாமி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

திருச்சி, கொட்டப்பட்டு, முசிறி ஆகிய இடங்களில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளின் முகாம்களுக்கு நேற்றுக் காலை விஜயம் செய்த அமைச்சர் ராமசாமி இவ்வுத்தரவைப் பிறப்பித்தார். இம் முகாம்களில் வாழும் மக்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்த அமைச்சர் அவர்களுக்கு வழங்கப்படும் உணவுப் பங்கீடு பற்றிய விபரங்களையும் அறிந்துகொண்டார். (செ)

## நள்ளிரவில் கொள்ளை!

(வவனியா]

வவனியா கதிரேசன் வீதியில் இருவீடுகளுக்குள் புகுந்த நான்கு கொள்ளையர்கள் அங்கிருந்த பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு வவனியாவர்த்தகர் ராமச்சந்திரன், முகாமையாளர் குமாரசுவாமி ஆகியோரின் வீட்டிலேயே மேற்படிசம்பவம் நடந்துள்ளது

சம்பவதினம் இனந்தெரியாத நால்வர் கையில் வெடிக்கும் ஒரு பொருளுடன், தலைக் கவசம் அணிந்தவாறு வந்து, நித்திரையில் இருந்தவர்களைத் தட்டி எழுப்பி இப்பயங்கரக் கொள்ளையை நடத்தினராம். [பி]

# மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி செல்லமுத்து

சுதுமலை வடக்கு மானிப்பாயைச் சேர்ந்த சின்னத்தம்பி செல்லமுத்து காலமானார். இவர் காலஞ் சென்ற சின்னத்தம்பியின் மனைவியும், தங்கராசாவின் [இலங்கை வங்கி, கொழும்பு] அன்புத் தாயாரும், சிவமணியின் மாமியாரும், ரதிவதனி, தயாளன், தயாபரனின் பேத்தியுமாவார் அன்னாரது ஈமக் கிரியைகள் 12-4-86 சனிக்கிழமை மானிப்பாய் பிப்பிலி மயானத்கில் நடைபெற்றது இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்- S. ஜெகநாதன்
மானிப்பாய் கிழக்கு, மானிப்பாய். [C1757]

### கதிரவேலு கனகரத்தினம் (இராசையா)

மல்லாகத்தைச் சேர்ந்த கதிரவேலு கனகரத்தினம் காலமாகிவிட்டார். இவர் தங்கம்மாவின் அன்புக் கணவரும், ரவீந்திரநாதன், பத்மநாதன் (பிரான்ஸ்) ஈஸ்வரிதேவி, லோகநாதன் (லண்டன்) சௌரிதேவி [பிரான்ஸ்], உமாதேவி, ஜெகநாதன் [பிரான்ஸ்] ஆகியோரின் அன்புத் தந்தையும், தயாநிதி, காஞ்சனதேவி [பிரான்ஸ்], தியாகராசா, ரவீந்திரநாதன் [பிரான்ஸ்], ஆகியோரின் மாமனருமாவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [13-4-86] காலை 10-00 மணிக்கு மல்லாகத்தில் நடைபெறும். நண்பர்களும், உறவினர்களும், இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- இ. தியாகராஜா.

[C 1742]

### நீக்கிளாப்பிள்ளை குருசுமுத்து
(சில்லாலை)

சில்லாலை நீக்கிளாப்பிள்ளை குருசுமுத்து 11-04-86 [வெள்ளி] இரவு அமரத்துவமானார் அன்னார் றெபேக்காவின் அன்புக்கணவரும், திருமதி லூட்ஸ் மரியதாஸ், அருட்சகோதரி றீற்று [திருச்சிலுவைச் சன்னியர் மடம்- யாழ்ப்பாணம்] திருமதி அக்கினஸ் சிங்கராயர் (ஜெர்மனி), திருமதி ரூபி மார்சலஸ் (ஜெர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், மரியாம்பிள்ளை மரியதாஸ் சந்தியோகுப்பிள்ளை சிங்கராயர், சிறில் மாசாறீன் ஆகியோரின் அன்பு மாமனும், திருமதி மரிய கொறத்தி நிசில்லி. திருமதி சந்திரா அருளானந்தம், ஜெயா. திலகா, சதீஸ், ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அவரின் சில்லாலை இல்லத்திலிருந்து இன்று (13-04-1986) ஞாயிறு பிற்பகல் மூன்று மணிக்கு சில்லாலை புனித யாகப்பர் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும். இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும். [C1746]

தகவல்: அ. ஸ்ரனிஸ்லாஸ்

### கந்தையா செல்லத்துரை
(மலேயன் பென்சனர்)

காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா செல்லத்துரை காலமாகிவிட்டார். அன்னார் வள்ளியம்மையின் அன்புக் கணவரும், இராஜசிங்கம், மகேஸ்வரி இராஜரட்ணம், பரம்சோதி, அருணசலம் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ஆறுமுகம் (மூதூர்), நித்தியலஷ்மி, பத்மாவதி, கமலாதேவி, பாலேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (13-4-86) நண்பகல் சாம்பலோடை மயானத்தில் நடைபெறும்.

செ. இராஜரட்ணம்
தங்கோடை,
காரைநகர்.
(C1764)

### சாவகச்சேரி சின்னத்தம்பி வேலுப்பிள்ளை

உசனைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சாவகச்சேரி கண்டி வீதி வைரவ கோவிலடியில் வசிப்பவருமாகிய இளைப்பாறிய ஆசிரியரும் ஐயாத்துரை என அழைக்கப்படும் சின்னத்தம்பி வேலுப்பிள்ளை அவர்கள் 12 ம் திகதி பிற்பகல் காலமாகிவிட்டார். அன்னார் அமிர்தாம்பிகை வித்தியாசாலை ஆசிரியை வாலப்பிள்ளை அவர்களின் அன்புக் கணவரும், கிருபாகரன் (ஜேர்மனி), உதயகுமாரி, இன்பகரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தந்தையும், தயாபரன், ஜீவகலா (ஜேர்மனி) ஆகியோரின் மாமனும், அகிலாவின் பேரனும், காலஞ்சென்ற பராசத்தி சிற்றம்பலம், நல்லதம்பி, வெற்றிவேலு, சண்முகம், முத்தையா, காலஞ்சென்ற சின்னத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார் அன்னாரின் ஈமக்கிரியை 13ம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4 மணியளவில் சாவகச்சேரியில் நடைபெறும். [C1765]